பகசங்கள்-16 | கார்த்திகை,15.2015 | விலை-30.00




நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

தினப்புயலில் சிறப்பு விளம்பரம்
விசேட விலைக் கழிவுடன் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க...
0778195947,
0775473592

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -146

## தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளே

- சிவமோகன் (பா.உ)



## இனப்படுகொலை, கைதிகள் விடுதலையை திசைதிருப்ப அரசாங்கத்தினால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட முகவரே எம்.பி.சுமந்திரன்

## பயங்கரவாத தடைச்சட்டமும், சித்திரவதை முகாம்களும்










Kandasamy Kovil Opposite / 165/ 5-A9, Kandy Road , Kilinochchi .P: 0774547728 / 0212285314 / 0212285315 / e-mail: ebnmulti@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# நத்தார்,புதுவருடத்தை முன்னிட்டு தினப்புயல் பத்திரிகையின் சிறப்பு விளம்பரம்










































































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை, கைதிகள் விடுதலையை திசைதிருப்ப அரசினால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட முகவரே எம்.பி.சுமந்திரன்



கடந்த சில வாரங்களாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில உறுப்பினர்கள், வடமாகாணசபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை அவருடைய அரசியல் போக்குச் சரியில்லையென்றும், கட்சியின் கொள்கைகளை மீறிச் செயற்படுகின்றார் என்றும் குறிப்பாகச் சுமந்திரன் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்விடயமானது தமிழ் மக்கள் தரப்பில் பெரும் சர்ச்சையையும், தமிழ் மக்களுடைய அரசியல் வரலாற்றில் ஒரு பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுடைய கருத்துக்களானது வடமாகாணசபையின் ஆரம்ப நாட்களின்போது காரசாரமாக இராது. ஆனால்ஒருவருடங்களின்பின்னர் காத்திரமான முடிவுகளையும், அரசியல் சொற்பதங்களையும் மைத்திரி அரசுக்கு எதிராக தமிழ் மக்களின் நலன் கருதி கூறி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரை வடமாகாணசபையின் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கும் போதே பல்வேறு சர்ச்சைகள் தோன்றியிருந்தன. இவர் சிங்களப் பேரினவாதத்துடன் இரண்டறக் கலந்தவர் என்றும், அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார் என்றும் பல அரசியல் ஆய்வாளர்களாலும் கூறப்பட்டது.

இருப்பினும் தற்பொழுது முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களால் முன்னெடுக்கப்படும் அரசியல் விடயங்கள் அரசாங்கத்துக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மேல்மட்டத் தலைவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பெரும் அழுத்தம் ஏற்பட்டதன் காரணமாக சுமந்திரன், மாவை போன்றோர் அவருக்கு எதிரான கோஷங்களை எழுப்புவதும், எமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அவர் செயற்படாது வடமாகாண சபையில் உள்ள ஒரு சில அமைச்சர்கள், உறுப்பினர்களைக்கொண்டு செயற்பட்டு வருவதாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்ததற்கு அப்பால் அவருடைய செயற்பாடுகள் அமைந்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டி இருக்கும் அதேநேரம், சுமந்திரன் வெளிநாட்டுக்குச் சென்று வெளிப்படையாக முதலமைச்சருக்கு எதிரான கருத்தை கூறியிருப்பது என்பது அக்கட்சிக்குள் பிள்வை ஏற்படுத்துவது மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கு மத்தியில் பிரிவினையை தோற்றுவிப்பதுடன் வடமாகாணசபையின் செயற்பாடு வேறு, கூட்டமைப்பின் செயற்பாடு வேறு என கோடிட்டுக் காட்டப்படுவதாகவே அமையப்பெறுகின்றது. கட்சிக்குள் ஆயிரம் முரண்பாடுகள் இருப்பினும் அதனை சீர்செய்யவேண்டியது கட்சியின் மேல்மட்டத் தலைவர்களின் பொறுப்பாகும்.

எனினும் அதனை வெளிச்சம் போட்டுக்காட்டி முதலமைச்சர் விக்னேஸ்வரனை கட்சியில் இருந்து ஓரங்கட்ட நினைப்பதென்பதும், அவருக்கு எதிரான செயற்பாடுகளில் சுமந்திரன் அவர்கள் களமிறங்கியிருப்பதும் வன்மையாக கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும். இதனை த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டும் காணாததைப்போல் இருப்பதென்பது தாமும் விக்னேஸ்வரனுக்கு எதிர்ப்பலைகளை தெரிவிப்பதாகவே கருத்தில் கொள்ளப்படும். சுமந்திரன் அவர்களுடைய செயற்பாடுகளைப் பார்க்கின்றபொழுது முஸ்லிம் சமுதாயத்தினருக்குப் பிறந்தவர் போல் அவருடைய பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றது.

மக்கள் ஆணையைப்பெற்றுத் தான் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தேன் என்று கூறும் சுமந்திரன் அவர்கள் தான் மோசடி மூலம் வந்தேன் என்பதை தெரிவிக்க மறந்துவிட்டார். படித்த பண்டிதர் கூழ்பானையில் விழுந்த கதையாய் சுமந்திரன் அவர்களுடைய அரசியல் பயணம் அமைந்திருக்கின்றது. அனுபவமுடைய ஆங்கிலம் தெரிந்தவர்களை வெளிவிவகார நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அனுப்பியிருக்க முடியும். சுமந்திரன் அவர்களுக்கு முக்கிய பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் வலி என்னவென்பது தெரியாது. கொழும்பிலிருந்து சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த சுமந்திரனை அரசியலில் அமர்த்தி அவருக்குப் பொன்னாடை போர்த்தியதன் மூலம் அதற்குப் பிரதிபலனாக ஏனைய அரசியல்வாதிகளை மட்டந்தட்டி, அவர்களைப் புறந்தள்ளி, அவர்களுடைய பதவிகளையும் தட்டிப் பறித்து, நானே ராஜா நானே மந்திரி என்று ஆகவேண்டும் என்பதற்காக இவர் தனது வங்குரோத்து அரசியலைச்செய்து வருகின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போராட்டத்தையும், அவர்களுடைய தியாகத்தையும் மதிக்கத்தெரியாத எந்தவொரு அரசியல்வாதியும் தமிழ்த் தாய்க்குப் பிறந்திருக்கமாட்டான் என்பதே பொருள். குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேசவேண்டிய சம்பந்தனும், சுமந்திரனும் அதே சமயத்தில் வெளிநாடு சென்றிருந்தமையானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளது. அவுஸ்திரேலியாவில் சுமந்திரன் அவர்களுக்கு தமிழ் மக்களால் எதிர்ப்பு அலைகள் தோற்றுவிக்கப்பட்டு தகாதவார்த்தைப் பிரயோகங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றார். தகாத வார்த்தைப் பிரயோகங்கள் என்பது அநாகரிகமற்ற செயற்பாடாக இருந்தாலும் விடுதலைப்புலிகளுடைய ஆதரவாளர்கள் சுமந்திரனைத் தாக்கிப் பேசியதென்பது தவறில்லை. இலங்கையில் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்க அந்தப் பேச்சுவார்த்தைகளை திசை திருப்புவதற்காக அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட ஒரு முகவர் தான் சுமந்திரன்.

சுமந்திரன் கூறிய கருத்தைப் போன்று EPRLF, PLOT, TELO கட்சிகளிலிருந்து யாராவது விக்னேஸ்வரனைப் பற்றி கூறியிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்களுக்குத் துரோகி என்ற பட்டம் சூட்டியிருப்பார்கள். ஆனால் இன்று தமிழரசுக்கட்சி சார்ந்த ஒருவர் விக்னேஸ்வரனை அவதூறாக வெளிநாடுகளுக்குச் சென்று குற்றஞ்சாட்டியிருப்பது தன்னைத் தட்டிக்கேட்க யாருமில்லை என்ற தைரியம் தான். சம்பந்தனுக்கு துதிபாடும் சுமந்திரன், சுமந்திரனுக்கு துதிபாடும் சம்பந்தன் என்பதுபோல் தான் தமிழரசுக் கட்சியினுடைய தற்போதைய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. விடுதலைப்புலிகளுடைய போராட்டத்தையும், அவர்களுடைய தியாகத்தையும் சம்பந்தனோ, சுமந்திரனோ மதிப்பதில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகள் என்று • தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் ஏற்றுக்கொண்ட சம்பந்தன் இன்று அவர்கள் ஏக பிரதிநிதிகள் இல்லை என்று விமர்சிப்பதும், நான் அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியிருப்பதும் அவர் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க எத்தனிக்கின்றார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் படி செயற்படுவதையே சம்பந்தனும், சுமந்திரனும் விரும்புகின்றார்கள்.

இந்நிலையில் இவர்களுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளில் ஒன்றான TELO அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை தனது பைக்குள் வைத்துக்கொண்டு என்ன சொன்னாலும் தலையாட்டவேண்டும் என்ற நிபந்தனையும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது. செல்வம் அடைக்கலநாதனைப் பொறுத்தவரையில் தனது பதவியை தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கின்றாரே தவிர, அவர் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக கடந்த காலங்களில் அறிவித்திருந்தார் ஆனால் அவர் அறிவித்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவருடைய பேச்சு இன்று செல்லாக்காசாக மாறியுள்ளது. கேட்டால் அரசியலில் இதெல்லாம் சகஜம் என்று சொல்லிக்கொள்வார்கள்.

ஆயுதப்போராட்டத்தில் இருந்து வந்த அவருக்கு அதன் வலி தெரியும். அந்த வலி தெரிந்தாலும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பிரதி அவைத் தலைவர் என்கின்ற பதவி தான் அவர் தமிழரசுக்கட்சியை இறுகப்பற்றிக் கொண்டிருக்கக் காரணமாகவும் அமைந்திருக்கின்றது. இனி அவர் சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக்கொள்ள இயலும். நிதானமாக செயற்படுகின்ற தமிழரசுக் கட்சியில் பாராளுமன்றத்தின் பிரதி அவைத்தலைவராக நியமிக்கப்படும் ஒருவர் மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்றவராக இருக்கவேண்டும். இதிலிருந்தே இவர்களுடைய சூழ்ச்சி என்னவென்பது புலப்படுகின்றது. தலையாட்டும் அரசியல் செய்பவர்களையே சம்பந்தனுக்கும், அவருடன் கூட இருப்பவர்களுக்கும் பிடித்தமானதொன்று. ஏனென்ற கேள்வி கேட்கக்கூடாது. அதனையும் மீறிக் கேள்விகேட்டால் அவரை ஓரங்கட்டுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வார்களே தவிர, ஒற்றுமையைவலுப்படுத்துவதில்அக்கறை காட்டுவதில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் வடமாகாண சபையையும், வெவ்வேறாக பிரித்துக் காட்டுவதில் சுமந்திரனுக்கு என்ன லாபம் இருக்கின்றது என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருக்கின்றது. அரசாங்கத்தினுடைய நிலைப்பாடுகள் இவ்வாறுதான் இருக்கின்றது என்று தெரிந்தும், அவர்கள் கூறும் அனைத்திற்கும் பச்சோந்தி போல் தன்னை மாற்றி செயற்படுவதென்பது எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று. முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான செயற்பாடுகளில் சுமந்திரன் அவர்கள் தீவிரமாக ஈடுபடுகின்றாரா? என வடமாகாணசபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் வினவியபோது, வடமாகாணசபையினால் சுமந்திரனுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று கூறியிருக்கின்றார்கள்.

முதலமைச்சர் விவகாரத்தில் தமிழரசுக்கட்சி கையாளும் முறையானது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. கட்சிக்குள் விசாரணைகள் நடத்தப்படுவதென்பது வழமையானதொன்று. அதனைப் பகிரங்கப்படுத்தி செய்யவேண்டும் என்றல்ல. இதுபோலவே அனந்தி சசிதரன், இளைஞர் அணித் தலைவர் சிவகரன் போன்றோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக தமிழரசுக்கட்சி கூறியிருந்தது. அப்பொழுது மௌனம் காத்துவந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், இன்று தனக்கெதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றபொழுது அதனுடைய வலியைப் புரிந்திருக்கின்றார். இருந்தும் அவருடைய அரசியல் செயற்பாடுகள் மிக நிதானமாகவே நகர்த்தப்படுகின்றது. தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழரசுக் கட்சிஉறுப்பினர்கள் அவரைத்தாக்குகின்ற பொழுது சில சந்தர்ப்பங்களில் அவர் மனஉளைச்சலுக்கு உள்ளாகின்ற நிலை ஏற்படலாம்.

இதனால் அவர் தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்யக்கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். அவ்வாறு நடைபெற்றாலும் பெரிதாக தமிழரசுக்கட்சி அலட்டிக்கொள்ளப் போவதில்லை. எதிர்க்கட்சிப் பதவி வேண்டாம் என்று கூறிக்கொண்டிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு திடீரென எதிர்க்கட்சிப் பதவிக்கு ஆசைப்பட்டது ஏன்? இங்கே நடந்த பிரச்சினைகள் தான் என்ன? எதிர்க்கட்சிப் பதவி ஏன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டது? என்றெல்லாம் பார்க்கின்றபொழுது இதன் பின்னணிகள் நீண்டதூரத்தில் இருக்கின்றது. முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அரசியல் அனுபவம் இல்லை என்று கூறுகின்றார்கள். அப்படியாக இருந்தால் சுமந்திரன் அவர்களுக்கு அரசியல் அறிவு இருக்கின்றதா? ஆனால் இருவரும் ஒரே துறையிலிருந்து வந்தவர்கள். ஒரு சிறிய வித்தியாசம் தான். முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு நீதியரசராக இருந்தவர். அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் அன்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்ன கூறினாரோ அதுவே இன்றுநடக்கின்றது. சட்டமா அதிபருடைய அனுமதி கிடைக்கின்ற பொழுதே அரசியல் கைதிகள் விடுதலை பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது எனக் கூறியிருந்தார். அதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. 07ம் திகதி கைதிகளை விடுதலை செய்வோம் என்று கூறிய நிலையில் இன்று நடந்ததென்ன? 30 பேரையாவது விடுதலை செய்கின்றோம் என்று கூறியிருந்தார்கள் அதுவும் நடைபெறவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, வடமாகாணசபை என்று பிரித்துக்கையாளுவதை தமிழ்மக்களாகிய நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அது அரசாங்கத்துக்கு மிகவும் வலுச் சேர்ப்பதாக அமைந்துவிடும். அரசியல் வாதிகளினுடைய கருத்துஎன்பதுஒருவரை வீழ்த்தி இன்னொருவர் மேலே வருவதாகவே அமையப்பெறும். அதற்காக தமிழ்த் தரப்புக்கள் மானங்கெட்ட அரசியலைச் செய்யக்கூடாது. தன்மானத் தமிழனாய் வாழ்ந்து காட்டியவர் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன். சிதைந்து கிடந்த தமிழினத்தையும், தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெறவேண்டும் என்ற நோக்கோடு போராட்டத்தை ஆரம்பித்து சர்வதேச ரீதியில் அதனைக்கொண்டு சென்றவர் என்ற பெருமை பிரபாகரனையே சாரும்.

09 ஆம் பக்கம் பார்க்க...

கூழியோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க அரசு தவறின் அதன் விளைவு பாரதூரமானது

நல்லிணக்கம் எனக்கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கம் அதற்கான பணிகளைச் செய்யவேண்டியதன் அவசியத்திற்குள் இருக்கிறார்கள். இதனைக் கருத்திற் கொள்ளாது 250இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியற் கைதிகள் 07ம் திகதி விடுதலைசெய்யப்படவிருந்த நேரத்தில் ஏதோவொரு காரணத்தினைக்கூறி வெறும் கண்துடைப்பிற்காக 32பேர் மாத்திரம் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதில் விடுதலைப்புலிகள் அல்லாதவர்களும் அடங்குகின்றார்கள். இலங்கையில் 65000 பொதுமக்களைக் கொன்றுகுவித்த ஜே.வி.பிஇற்கு பொதுமன்னிப்பினை வழங்கி இன்று அவர்கள் பாராளுமன்றில் சுதந்திரமாக செயற்படமுடியுமாகவிருந்தால், தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் பொதுமன்னிப்பினை வழங்கமுடியாது. தென்னிலங்கை மக்களுக்கு ஒரு சட்டம், வடகிழக்கு மக்களுக்கு தனியொரு சட்டமா? அப்படியெனில் தனிநாடு ஒன்றிற்காக போராடுவதற்கான சூழ்நிலைகளை இந்த அரசாங்கம் உருவாக்கிக்கொடுக்கிறதா?

திட்டமிட்டே இலங்கையரசு பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்காமல் இருக்கின்றது. இந்தச் சட்டம் நீக்கப்படுமாயின் ஒட்டுமொத்த அரசியற்கைதிகளும் விடுதலை செய்யப்படுமிடத்து மீண்டுமொரு அச்சம் இந்த நாட்டில் நிலவுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதாகவே சிங்கள இனவாதக்கட்சிகள் கருதுகின்றன. தமது விடுதலைக்காக உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் இறந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. சட்டங்களை சரளமாக அறிந்தவர்தான் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள். அவர் நீதியரசராகவிருந்தபோதும் அரசியல் கைதிகளுக்கு தீர்ப்புக்களை வழங்கியிருக்கின்றார்.


த.தே.கூட்டமைப்பிலுள்ள ஒருசில அரசியல்வாதிகள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தமது எதிர்ப்பலைகளை தெரிவிப்பதாக அதன் தோற்றப்பாடுகள் அமைந்தாலும், முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் இவ்வரசியல் கைதிகளின் விடுதலைக்காக தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவரும் அதே சமயம், சர்வதேச நாடுகளில் ஒரு குழப்ப நிலையினைத் தோற்றுவிப்பதற்காக அரசு திட்டமிட்டு, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான சுமந்திரன் அவர்களை முதல்வருக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட வைத்துள்ளது.

அரசியல்கைதிகள் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பாக அனைவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, வெளிநாட்டிற்குச் சென்று அங்கிருக்கும் அரசியல் பிரமுகர்களையும், இராஜதந்திரிகளையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தவேண்டியது அவசியம்தானா? ஒரு சட்டத்தரணிக்கு கைதிகளின் விடுதலை என்பது நன்கு தெரிந்ததே. இவ்வாறிருக்க, கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களும் இந்த சந்தர்ப்பத்தில் வெளிநாடு சென்றிருப்பதானது, நடப்பவை நடைபெற்று முடியட்டும், நாம் பேச்சுக்களை நடாத்துவோம் என்பதாகவே அமையப்பெற்றிருக்கின்றது.

தேர்தல்கள் வரும்பொழுது விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றும் போலியான பிரச்சாரங்களை முன்னெடுத்தும், பாராளுமன்றக் கதிரைகளுக்கு பாதுகாப்பளித்த இவர்கள், தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பில் அக்கறையின்மையோடு செயற்படுவது வேதனைக்குரியது. அரசுகள் தமிழனைக்கொண்டே தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் பயனற்றதாக மாறியிருக்கின்றது. இந்நிலையில் நல்லாட்சி என்று எதனைக் கூறுவது. இவ்வாறு தொடர்ந்தும் இவ்வரசு பயணிக்குமாகவிருந்தால் தமிழினம் தனிநாடு கோருவதைத் தவிர, வேறு வழியில்லை.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

**70** தொலைதூரம் காரணமாகவும் படையினரின் எறிகணைவீச்சு, பதுங்கித் தாக்குதல் காரணமாகவும் தாமதமாக எங்கள் கைகளுக்கு வருகின்ற உணவு புளித்துப் போயிருந்தாலுங்கூட அதையே சூடாக்கிச் சாப்பிட்ட நாட்களையெல்லாம் கடந்து வந்தநேரம். தலைவரின் அன்பில் நெகிழ்ந்துபோனோம். அவர் வரவில்லை இன்னமும். ஆனால் அருகில் நிற்பதுபோல் உணர்வு எங்களுக்கு. நாலா திக்கிலும் களங்கள்



விரிந்துகிடந்ததால் பிரிந்திருந்தவர்கள் ஒன்றுசேர கூடிக் கும்மாளமடிக்க, பயிற்சி செய்ய, படம்பிடிக்க, விதவிதமாய் சாப்பிட, அடிக்கடி தலைவரைப் பார்க்க, அவரோடு மனம்விட்டுப் பேச, பாட... எதிர்பாராமல் கிடைத்த வாய்ப்பில் சற்றுத் திணறித்தான்போனோம்.

ஓய்வில்லாத தலைவர் எங்களுக்காக ஒதுக்கி நேரே வந்து கதைத்து நேரடியாக எங்களின் சூட்டுப் பயிற்சியைப் பார்த்து எங்களோடு சேர்ந்து தானும் பயிற்சி செய்து, மேடையேறி நாங்கள் செய்த நிகழ்வுகளைப் பொறுமையாகப் பார்த்து, நாங்கள் பாட ஆறுதலாக இருந்து கேட்டு, எங்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்தி, தன்னுடைய எதிர்பார்ப்புகளை, கற்பனைகளை எங்களோடு பகிர்ந்துகொண்டு... அது ஒரு தென்னந்தோப்பு என்று யார் சொன்னது? எங்களுக்கு அதுவே நந்தவனமானது. களமுனைகளிலிருந்து ஜனவரி 29ஆம் நாள் முதல் வரத் தொடங்கிய எங்கள் படையணியின் கடைசி அணி அங்கே வந்துசேர்ந்தது பெப்ரவரி 8ஆம் நாள் இரவில். நாம் நின்ற தொலைவுகளும் சுமந்திருந்த பொறுப்புகளும் இலகுவில் எங்களை வர அனுமதிக்கவில்லை. 2000.02.09 அன்று எங்களைச் சந்தித்த தலைவர் அவர்கள், "போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்தில் போராளிகள் நிற்க இரண்டு வரிசையே போதும். இன்று ஒரு படையணியைப் பின்னணிக்குக் கொண்டு வந்து சேர்ப்பதே பெரிய வேலையாக இருக்கின்றது." என்றார்.

"உலகில் பெரிய தொகையில் பெண்கள் நேரடிச் சமரில் ஈடுபடுவது குறைவு. அப்படி ஈடுபடுபவர்களும் தொலைத்தொடர்பு, பின்னணி வேலை, மருத்துவப் பணி என்பவற்றிலேதான் பெரும்பாலும் பங்கேற்கின்றனர். அர்ப்பணிப்பு உணர்வுடன் மிக நெருக்கமான சண்டையில் ஈடுபட்டுள்ள பெண் போராளிகள் நீங்கள் தான்" என்று மேலும் கூறிய தலைவர் அவர்கள் தொடர்ந்து "இன்று முழு உலகமே தங்களுடைய மண்ணையும் மக்களையும் மொழியையும் பாதுகாப்பதற்காக, தமது படைபலத்தையும் ஆயுத பலத்தையும் மிகவும் திறமையாக வளர்த்து வைத்திருக்கின்றார்கள். அதுபோலவே நாமும் எங்களிடம் ஆட்பலம், ஆயுத பலம் இருந்தாலும், திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

நீங்கள் மண்ணுக்காக மடிவதைவிட மண்ணைக் காக்கப் போராடுவதே முக்கியம். நீங்கள் உங்களை அழிப்பதைவிட, எதிரியை அழிப்பதிலேதான் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். சாவைத் தவிர்க்கவேண்டும். அதற்காகத்தான் உங்களுக்குக் கடினமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எதிரி காப்பிலிருந்தவாறு சுடும்போது உங்களுக்குக் காயமேற்பட்டால் நீங்கள் அந்த இடத்தைவிட்டுப் பின்வாங்கவேண்டி வரும். இதையே நீங்களும் எதிரிக்குச் செய்யுங்கள். இக்கட்டான சூழ்நிலை வந்தால், உடனேயே முடிவெடுத்து நான்கு இராணுவத்தையாவது சுட்டுவிட்டுத் தப்பி வாருங்கள்.

நீங்கள் என்னுடைய படையணி. அதனால்தான் உங்களோடு நீண்ட நேரத்தைச் செலவிடுகின்றேன். நீங்கள் கடைசி வரையும் விட்டுக்கொடுக்கக்கூடாது. உங்களில் நான் அதிகளவு நம்பிக்கை வைத்திருக்கின்றேன். அதற்கேற்ப உங்களின் நடவடிக்கைகள் இருக்கவேண்டும்" என்று தனது எதிர்பார்ப்புகளை முதல்நாள் சந்திப்பிலே பகிர்ந்துகொண்டார். நடந்துமுடிந்த சண்டைகளில் எங்களுக்கேற்பட்ட ஐயங்களை எல்லாம் தெளிவுபடுத்தினார். நெருக்கடி மிகுந்த களங்களிலெல்லாம் ஆதரவுச் சூடுகளுக்கு வழுத்திருத்தம் சொல்வதற்காகப் படையினரைக் கண்காணிக்க வசதியாக எங்களுக்குத் தொலைநோக்கிகள் தேவை என்பதையும், தற்போது அவை இல்லாமலேயே தாம் பணிசெய்வதையும்தலைவர் அவர்களிடம் மேஜர் தமயந்தி சொன்னார். அவர் கதைப்பதைக் கூர்மையாகக் கவனித்த தலைவர் அவர்கள் தமயந்தியைக் கூப்பிட்டு, தன் சொந்தப்பாவனையிலிருந்த தொலைநோக்கியை அவரிடம் கொடுத்து, பணியை மிகச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று வாழ்த்தினார். வெற்றிலைக்கேணிப் பகுதியில் நாம் தனித்து நின்றபோது பெரும் எண்ணிக்கையான படையினர் தமக்கருகேயிருந்த வீதியால் ஊர்திகளில் போனபோது தாக்குவதற்குத் தோளில் காவும் எறிகணை செலுத்திகள் அற்றதால் கையறுநிலையில் தாம் நின்றதாக மேஜர் வேழினி சொன்னதைத் தலைவர் அவர்கள் கவனத்துடன் கேட்டார்.

அதே பகுதியிலே படையினர் தம்மைச் சூழ்ந்திருந்த நிலையிலே வெளியில்நின்ற பொறுப்பாளர்களுடன் தொடர்பைச் சீராகப்பேணி, இருந்த வளத்தைச் சரியான முறையில் பயன்படுத்திப் படையினரைத் தாக்கி முற்றுகைக்குள் நின்ற ஆண் போராளிகளையும் அழைத்துக்கொண்டு முற்றுகையை முறியடித்த லெப்.கேணல் சாந்தகுமாரிக்குத் தலைவர் சிறப்புப்பரிசு ஒன்றையும் வழங்கிக் கௌரவித்தார். அவருக்கும் எங்களுக்குமான சந்திப்பின் சிறப்பு நிகழ்வாக நாங்கள் கலை நிகழ்வுகளை மேடையேற்றினோம். கலை நிகழ்வுகளுள் சிறப்பு நிகழ்வாக கருத்தாடல் களம் ஒன்றைச் செய்திருந்தோம். சண்டையொன்றின் வெற்றியைத் தீர்மானிப்பது பயிற்சியா, துணிவா என்ற தலைப்பில் மிகவும் விறுவிறுப்பாக அது நடைபெற்றது. இரு அணியினருமே தமது தலைப்பை வலியுறுத்துவதற்கு எமது தேசியத் தலைவர் அவர்களின் கருத்துக்களையே எடுகோள்களாகப் பயன்படுத்தினார்கள். உண்மைச் சம்பவங்கள் பலவற்றை எடுத்து விளக்கினார்கள். இந்திய இராணுவக் காலங்களில் தலைவர் எடுத்த துணிச்சலான முடிவுகளையும், அதன் விளைவுகளையும் துணிவே முக்கியம் என்ற அணியும், பயிற்சி, தந்திரம், துணிவு இவை மூன்றுமே வெற்றிக்கு அடிப்படை என்ற தனது கூற்றில் தலைவர் அவர்கள் பயிற்சியை முதன்மையாகவும் துணிவை மூன்றாவதாகவும் குறிப்பிட்டிருந்ததைப் பயிற்சியே முக்கியம் என்ற அணியும் எடுத்து விளக்கமாக வாதாடிக்கொண்டிருந்தன. கருத்தாடல் களத்தின் முடிவில் தலைவர் அவர்கள் உரையாற்ற எழுந்தார். தொடர்ந்து சண்டையிலேயே நிற்கின்றவர்கள் என்றபோதும், மிகவும் ஆழமான பழைய சம்பவங்களைக்கூட அறிந்து வாதாடியதை அவர் மிகவும் பாராட்டினார். தொடர்ந்து அவர் தனது உரையில், "உலகளாவிய ரீதியில் மிகக் கூடியளவு பயிற்சி பெற்ற படைகள் கூடத் துணிவின் முன்னால் மண்டியிட்டுத்தான் இருக்கின்றன. துரோகி பஸ்தியாம் பிள்ளையைச் சுட்டபோது லெப்.செல்லக்கிளிக்கு இயந்திரத் துப்பாக்கியில் பயிற்சி இல்லை. அவர் துப்பாக்கி வைத்திருந்த விதத்தைப் பார்த்து ஊகித்துத்தான் இவர் சுட்டார். அந்த வெற்றி துணிவால் கிடைத்தது.

இருதரப்புமே எனது கருத்துக்களைக்கூறி வாதிட்டது எனக்கு வியப்பைத் தந்தது. உடல் முக்கியமா, உயிர் முக்கியமா என்ற விவாதம் என்மனதில் நடந்தது. உடலை வைத்துத்தான் உயிர் இயங்குகின்றது. துணிவு உடலைப் போன்றது. துணிவை வைத்துத்தான் பயிற்சி செய்யலாம். சாதிக்கலாம். இரண்டுமே பிரிக்கமுடியாதவை. இந்திய இராணுவக் காலத்தில் அவர்களின் ஆயுதப் பயிற்சியுடன் ஒப்பிடும்போது நாங்கள் துணிவை வைத்துத்தான் செயற்பட்டோம். எனவே பயிற்சி, தந்திரம், துணிவு என்பதை இன்றிலிருந்து துணிவு, பயிற்சி, தந்திரம் என்று மாற்றிக்கொள்ளுங்கள். துணிவு என்ற உடல்கொண்டு, பயிற்சி எனும் உயிர்பெற்று எதிர்காலத்தில் செயற்படுவோம்" என்று குறிப்பிட்டார். இதன் பின்னர் தொடர்ந்தும் நடந்த சந்திப்புக்களில் அவர் நிறைய விடயங்களை எங்களோடு கதைத்தார். பெரிய பெரிய விடயங்களையெல்லாம் மிக எளிமையாக விளக்கினார்.

"எப்போதும் உங்களுக்கு ஒன்றை நான் சொல்லுவேன். நீங்கள் யாரும் தேவையற்று உங்கள் உயிரை இழக்கக்கூடாது. நீங்கள் உயிர் வாழ்ந்து, எதிரிகளை அழித்துக்கொண்டிருக்கவேண்டும். நான் முடிந்தேன் என்று நினைக்கக்கூடிய எத்தனையோ வேளைகள் வந்தன. நான் என்னால் முடிந்தவரை தப்பியிருக்கின்றேன். யுத்தம் என்றால் இழப்புக்கள் வரும். இழப்புக்களைக்கண்டு அஞ்சக்கூடாது. தேவையற்ற இழப்புக்களையும் காயங்களையும் தவிர்த்துக்கொண்டு போராடவேண்டும்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 448. | வீ.வே.அகக்கதிர் | கலைவாணி ராம்குமார் | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 449. | வீ.வே.அகச்செல்வி | இந்திராதேவி நடராஜா | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 450. | வீ.வே.அகரக்கணை | இந்துமதி கார்த்திகேசு | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 451. | வீ.வே.ஈழநிலா | விஜயலலிதா துரைசாமி | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 452. | வீ.வே.அலைச்சிட்டு | ரஜனிகாந்தா பதவர் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 453. | வீ.வே.குயில் | [illegible] | முல்லைத்தீவு | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 454. | வீ.வே.இளங்[illegible] | [illegible]பிள்ளை | முல்லைத்தீவு | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் விரைவில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் சுதந்திரக்கட்சிக்குச் சார்பாகப் பிரச்சாரம் செய்யப்போவதாக அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த 17.08.2015இல் இடம்பெற்ற இலங்கையின் 08ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக் கூட்டணியானது, சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்பைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியிருந்தமை தெரிந்ததே. இவ்வாட்சியில் ஐ.தே.க பிரமுகரான ரணில் அவர்கள் பிரதமராக, மைத்திரி அவர்கள் ஜனாதிபதியுமானார். பின்னர் இவ்வரசாங்கமானது இரு வருடங்களுக்கான தேசிய அரசாங்கம்

பிரதிபலிப்பொன்று தோற்றம்பெற்றபோது கொழும்பு மாவட்டத்தில் வாழும் அனைத்துப் பிரதேசங்களையுஞ் சேர்ந்த தமிழ் மக்களுக்கு ஏகபோக மான கதாநாயகனாக வலம்வர வேண்டுமென்னும் கள்ளத்தனமான மனவோட்டத்தின்பாற்பட்டு கொழும்பு, நீர்கொழும்பு, பாணந்துறை என்னும் மூன்று மாவட்டங்களை மட்டுமே உள்ளடக்கிய மேல் மாகாணத்திற்கென மேலகமக்கள்முன்னணிஎன்னும்பெயரில் அரசியல் கட்சியொன்றை ஸ்தாபித்து இன்று உலகம் முழுவதும் ஊடகங்கள் அனைத்தையும் தன்வசப்படுத்திய கபடி விளையாட்டின் தாற்பரியத்தைத் தலை நகர் அரசியலுக்குள்ளும் மிகவும் குறு கிய மனோபாவத்தின் பாற்பட்டுப் புகுத்தினார். நாம் இச் சந்தர்ப்பத்தில் இந்நபர் காலத்துக்குக்காலம்


சேன அவர்கள் தான் கூறியது போலவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சுதந்திரக்கட்சிக்குச் சார்பாகப் பிரச்சாரங்களை முன்னெடுப்பாராக விருந்தால் அக்கட்சியானது ஐக்கிய தேசியக்கட்சியைப் பின்னடையவைத்து உள்ளூராட்சிச் சபைகளில் அதிகளவு ஆசனங்களைப் பெறுவதோடு தற்போது நாடாளுமன்றத்திலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் பலங்குன்றிய நிலையிலுள்ள இடதுசாரிக் கட்சிகளுக்கும், விமல் வீரவன்ச அவர்களின் அரசியல் அமைப்புக்கும் குளுக்கோசு ஏற்றிப் புத்துயிரளிப்பதற்கும் வழிவகுக்கும்.

மேலும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமர சேகர, சிஹல உறுமய போன்ற சிங்கள, பௌத்த கடும்போக்காளர்கள்,

கீழ்க் கொண்டுவரவே செய்யும். இந்த அரசியல் நிர்வாக மாற்றமானது தற்போதைய நாடாளுமன்றத்தின் என்றுமே இல்லாதவாறான இரட்டை



# உள்ளூராட்சி மன்றத்துக்கான தேர்தலில் மைத்திரியின் சுதந்திரக்கட்சி சார்பு நிலை



என்னும் இரு கட்சிகளையும் உள்ளடக்கிய மாயமான் ஒன்றைத் தந்திரமாக உலவ விட்டதனால் எதிர்க்கட்சியாகச் சிங்கள மக்களினால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய அணி எதிர்க்கட்சியென்னும் நிலையிலிருந்து விலகிச் சென்றதனால் தமிழ்த் தேசியத்தின் பெயரால் வடக்கிலும், கிழக்கிலும் தமது வாக்கு வங்கியை வழக்கம்போலவே நிரப்பிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது எதிர்க் கட்சியாகவும், திருமலை இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலை வர் ஆகும் வாய்ப்பும் எதிர்பாராத விதமா கவும் அமைந்திருந்தது.

சிங்கள மக்களுக்குள் பெருமளவு ஆதரவுடன் தெரிவாகிய ஐக்கிய தேசி யக் கட்சியாகவிருந்தாலுஞ் சரி, மலையக மக்களுக்குள் தெரிவான அரசியல் இயக்கங்களாகவிருந்தாலுஞ் சரி, தமிழ் முற்போக்குக் கூட்டணி என்னும் பெயரில் ஐ.தே.கட்சிக்கு வக்காலத்து வாங்கும் வண்டவாள அரசியல் செய்யும் அமைப்பாகவிருந்தாலுஞ் சரி, வடபுலத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப் பாகவிருந்தாலுஞ் சரி இத்தேசத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதிய உலகமயமாக்கல் என்னும் அகிலத்தையே கபளீகரம் செய்யும் கயமைத்தனமான கைங்கரியத்திற்குத் துணைபோகும் அரசி யல் அமைப்புக்களேயாகும். இவ்விடத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி என்னும் தமிழ் உணர்வையும், தொழிலாளர் விமோசனத்தையும் முற்றாகக் கொச்சைப்படுத்தும் அமைப்பின் தலை வரின் தந்தையார் பிரபல்யமான சினிமாத் தயாரிப்பாளராகவும், நடிகராகவும், தொழிற்சங்கத் தலைவராகவும் இருந்தவர் என்பதோடு அவருடைய புதல்வரான அன்னார் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே தன்னை ஆரம்பத்தில் இணைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் ஜனநாயக மக்கள் முன்னணி எனப் பூச்சாண்டி காட்டிய இந்நபர், விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை இழந்து நீண்ட கால நகர்வுக்குப் பின்னரான அவ்வமைப்பினரின் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்களான காலப்பகுதியில், இனிமேல் தமிழ் ஈழம் அமைப்பது அசாத்தியமானதே என்னும்

எவ்வகையான வேடங்களைத் தரித்தாவது அவ்வேடங்களுக்கு ஏற்றவாறு கபடி ஆடி னாலுங் கூட, அன்னார் ஒரு சாட்சாத் ஐ.தே.கட்சியின் விசுவாசியும் (U.N.P follower) அமெரிக்க தாசருமே (Pro - American) என்னும் பேருண்மையை நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து இன மக்களுக்கும் எடுத்துக்கூறி அம்மக்களை அம் மக்களின் நலனை முன்னிறுத்தி எச்சரிப்பது மட்டுமல்ல அந்நபர் தமிழினத்திற்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே ஐ.தே.க இன் சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியலில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வடபுலத்து அரசியலாளர்கள், மலையகத்தின் ஏனைய ஏகாதிபத்திய - முதலாளித்துவ விற்பன்னர்கள், முஸ்லீம் லீக் போன்ற இஸ்லாமிய அமெரிக்க அடி வருடிகள், யாழ்ப்பாணத்தின் பச்சை அணி அமெரிக்க விசுவாசியான அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன், அமைச்சர் விஜயகலாமகேஸ்வரன் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் விட மிகுந்த ஆபத்தானவர் என்பதே நிஜத்திலும் நிஜமாகும்.

எவ்வாறு தமிழ் இளையோரின் ஆயுதப்போராட்டத்திற்கு அவர் கள் மத்தியில் இடம்பெற்ற இராணு வத்துடனான இணைவு ஆபத்தான ஒன்றாக விளங்கியதோ அதைவிட மிகுந்த ஆபத்தான ஒன்று இந் நபருடைய அயோக்கியத்தனமான அரசியல் காய்நகர்த்தல்கள் என்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் பலமாக இடித்துரைக்க விரும்புகின்றோம்.

நிலைமை இவ்வாறிருக்கும் போதுதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், விரைவில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யப்போவதாக யாருமே எதிர்பாராதவிதமாக ஒருபோடு போட்டுள்ளார். ஜனாதிபதி அவர்களின் இக்கருத்தினால் பிரதமர் ரணில் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் அதிர்ந்து போயுள்ளார்கள். மைத்திரி அவர்கள் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் நிலையில் வளர்த்த கடா மார்பில் பாயும் நிலைக்கு ஆளாகியுள்ளார் என அவர்கள் எண்ணித் துன்புறும் நிலை யைத் தோற்றுவித்துள்ளார். [illegible]

அவர்கள் ஐ.தே.க இன் விரோதிகளாக இல்லாதபோதுங்கூடச் சமகால அரசியல் கள அமைவில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, மலையக ஐ.தே.க சார்பான அணிகள், முஸ்லீம் லீக் போன்ற கட்சிகளின் அனுசரணை யோடு இயைந்ததான ரணில் ஆட்சி தேசப் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்னும் கருத்தற்ற, விஷமத்தனமான கூச்சலும் சிங்கள மக்களுக்குள் பரவலாக இடம்பெற்று வருவதால் ஜனாதிபதி தான் தற்போது கூறியவாறே எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்குச் சார்பாகப் பிரச்சாரம் செய்வாராக இருந்தால் நிச்சயமாகத் தற்போது ஐ.தே.க இன் வசமுள்ள பல உள்ளூராட்சிச் சபைகளும் சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்குள் ஆட்பட்டுவிடும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

இதனால் இரட்டை வேடம் பூண்டு ஆட்சிசெய்யும் அரசாங்கம் அது போதாதென்று இரண்டு வருடங்களுக்கான தேசிய அரசாங்கம் என்னும் மாயமானையும் இணைத்துப் பூச்சாண்டி காட்டிவருவது, வலுவிழந்தாலுங்கூட, சுதந்திரக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி, வாசுதேவ நாணயக்கார அவர்களின் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய வையும், விமல் வீரவன்ச அவர்களின் தேசிய ஐக்கிய முன்னணி, குணதாச அமரசேகர அவர்களின் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சிஹல உறுமய போன்ற அணிகளும் ஒன்றிணைந்து தமி ழர் விரோதப் போக்கை ஆக்ரோசமாக முன்னெடுக்கும்போது, வடபுலத்தின் அமெரிக்க சார்பு (PRO-AMERICA) தமிழ்த்தேசியவாதிகளும், மலையத்தின் அதே தமிழ்த்தேசியவாதிகளும், இஸ்லாமியக் குறியீட்டைத் தம்வசம் கொண்டுள்ள அதே அமெரிக்கத் தாஷர் களும் வழக்கம்போலவே ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஆட்சியின்போது தணிந்திருக்கும் தமிழ் உணர்வையும், தத்தம் மக்கள் குழுமங்கள் சார்ந்த உணர்வையும் மெருகேற்றி அசாதாரண மான நிலைக்கு உயர்த்துவதோடு ஆரவார மாக எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு கதாநாயகர்களாக வலம் வரவும் செய்வார்கள்.

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் தொடங்கி, அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் இடையிட்டு அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஈறாகத் தொடர்ச்சியாக வட புலத்தில் இடம்பெற்று வந்த இத் தமிழ்த் தேசியம் என்னும் தகிடுதத்தம் அவர்களையும் சிறி தளவேனும் சோபையிழக்காத நிலையில் ஆட்கொண்டிருப்பது ஆச்சரியப்படத்தக்க ஒன்றல்ல என ஆய்வாளர் ஆழ்ந்து அறி வர்.

எது எப்படியிருந்தபோதும் மைத்திரி அவர்களின் கூற்று உண்மையாகி அவர் எதிர்வரும் உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் சுதந்திரக் கட்சிக்குச் சார்பாகப் பிரச்சாரஞ் செய்யின் அக்கட்சியானது நிச்சயமாக உள்ளூராட்சி மன்றங்களில் [illegible] தனது ஆதிக்கத்தின்

வடக்கலப்பு ஆட்சியையும், தேசிய அரசாங்கம் என்னும் மாய் மாலத்தையும் சுக்குநூறாக்குவதற்கான அடிப்படையாய் அமையுமென்பது வெள்ளிடைமலையே.

இவ்வடிப்படையானது நாடாளு மன்றத்துக்கான அடுத்த பொதுத் தேர்தலின் போது நிதர்சனமாகிச் சுதந்திரக் கட்சியினரும், இடதுசாரிக் கட்சிகள் என அழைக்கப்படுகின்ற அணியினரும், விமல் வீரவன்ச அவர்களின் தேசிய ஐக்கிய முன்னணியினரும் இணைந்து ஆட்சியமைக்கும்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்மீதும் ஏனைய தமிழ்க் குறியீட்டுக் கட்சிகள் மீதும் கொண்டுள்ள வெறுப்பினால் முன்னரைவிடத் தமிழர் விரோத நடவடிக்கைகளை மிக வீரிய முடன் மேற்கொள்வார்கள் என்பது திண்ணம். இதனால்பாதிக்கப்படப்போவது சம்பந்தன் என்னும் தனிநபரோ அல்லது இலங்கைத் தமிழரசுக் கட்சியென்னும் பழம்பெருமை வாய்ந்த கட்சியோ அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்னும் புதிதாகப் பிறப்பெடுத்த பூராயம் பேசும் புண்ணியவான்களின் கூடாரமோ அல்ல மாறாக வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக முப்பது ஆண்டுகள் இடம்பெற்ற யுத்தத்தின்போது தமது மழலைகளை யும், உறவுகளையும் இழந்து அபலைக ளாக ஆக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்தத் தமிழினமும் பாதிக்கப்படும் என்பதே பேருண்மையாகும். வசந்தத்தின் வாசலில் நின்று இன்ப நுகர்வுக்காக உட்செல்லவேண்டிய இளையதலைமுறை யினரின் இதயம் இருள் சூழ்ந்துவிடத் தமிழ்த் தேசியத்தின் பேரால் தெற்கின் ஐ.தே.க அரசாங்கத்தின் கண்ணியம் மிக்க தலைவர்களாக விளங்கும் வடக்கின் அரசி யலாளர் அப்பிரதேசத்தின் அபலைகள் இவ்வடிப்படையின் பாற்பட்டுப் பாதிக்கப்படுவதை எவ்விதத்திலாவது தடுத்து நிறுத்துவார்களா? என வின வின் இல்லை ஒருபோதும் இல்லை என்பதே முடிந்த முடிவான முடிவாகவும் இருக்கமுடியும்.

வடக்கு-கிழக்கில் வதியும் தமிழ் மக்கள் இவ்வாறாகப் பாதிக்கப்படும்போது மலையகத்தின் வலதுசாரி அமெரிக்க சார்பு முதலாளித்துவ அரசியல் தலைவர்களின் தற்போதைய ஐ.தே.க இன் அசாதாரணமான சார்பு நிலையினால் அவர்கள் மீதும் வெறுப்படைந்துள்ள சுதந்திரக் கட்சியினரின் அம்மக்கள் சார்ந்த குரோதம் மிக்க நடவடிக்கையினால் அவர்களும் பாதிக்கப்படுவதற்கான ஏதுநிலையுண்டு. இதுமட்டுமல்லாமல் மஹிந்த அரசில் நீதி அமைச்சராகப் பதவி வகித்தமையோடு 2015ஆம் ஆண்டு தைத்திங்கள் இடம்பெற்ற இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில், தனது ஐ.தே.க சார்பு நிலையைப் பறைசாற்றும் விதமா கத் திடீர் பல்டி அடித்து ஐ.தே.கட்சியின் சார்பான ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளித்த ரவூப் ஹக்கீம் அவர்களும் தற்போதைய ரணில்-மைத்திரி அரசில் உள்ளமையால் அவர் மீதுள்ள பழைய கோபத்துக்குப் பழிவாங்கும் விதமாக புதிதாகச் சுதந்திரக் கட்சியானது பதவியில் அமருமிடத்து இஸ்லாமியக் குடிமக்கள் மீது சவாரிவிடவுங் கூடும்.

09ஆம் பக்கம் பார்க்க...

**வீரப்பதி விநோதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டமும், சித்திரவதை முகாம்களும்



தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று சதாப்தங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் 1990ம் ஆண்டு காலப்பகுதியில் பயங்கரவாதிகள் எனக்கூறி கைதுசெய்யப்பட்டவர்கள் இன்னமும் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதுடன் அதில் சிலர் இறந்தும் போயுள்ளார்கள். குறிப்பாக வெலிக்கடை, போஹம்பர, மகர, கொழும்பு ரிமான்ட் (சி.ஆர்.பி), பூசா, மகசின் போன்ற சிறைச்சாலைகளிலே அதிகமான அரசியல்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் அவர்கள் மனோரீதியிலான தாக்கத்துக்கு உட்படுத்தப்பட்டும் வருகின்றார்கள். அவர்களின் விடுதலைக்கு முட்டுக்கட்டையாக இருப்பது பயங்கரவாத தடைச்சட்டமே. இதனை நீக்குவதற்காக தமிழ் மக்களைப் பிரதிபலிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கவேண்டுமே தவிர, வேறு யாராலும் இதனைச் செய்யமுடியாது. 1990ம் ஆண்டு தொடக்கம் 1995ம் ஆண்டு காலப்பகுதி வரை தமிழ் அரசியல் கைதிகளுக்கு மகசின் சிறைச்சாலையில் நடந்த சித்திரவதைகள் சொல்லில் அடங்காதவை. அவர்கள் குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே உயிர்வாழ்வார்கள் என்பது தான் உண்மை. குட்டிமணி, தங்கத்துரை இவர்கள் இருவரும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து கம்பிகளால் கண்கள் தோண்டப்பட்ட நிலையில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுடைய இன விடுதலைக்கான யுத்தம் படிப்படியாக பரிணாம வளர்ச்சி கண்டதன் பின்னர் தமிழினத்தில் உள்ள இளம் சந்ததியினரை இராணுவத்தினர் ஏதோவொரு சந்தர்ப்பங்களில் கைதுசெய்து பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி சிறையில் அடைப்பதும் வழக்கம். அக்காலத்தில் நான்காம் மாடியில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பாக நாம் அனைவரும் அறிந்ததே.

1990-1995 காலப்பகுதிகளில் கைதானவர்களுக்கு அதிகமாக உடல் ரீதியான சித்திரவதைகளும், 1995-2000 வரைகைதானவர்களுக்குசித்திரவதைகள் குறைக்கப்பட்டிருந்தது. 2000-2005 வரை மனோரீதியான சித்திரவதைகளும், 2005-இன்றுவரை அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தகவல்களை அறிந்துகொண்டு அதன் பின்னர் அவர்களுக்கு விஷ ஊசியினைப் பயன்படுத்தலே தற்போதைய சி.ஐ.டி விசாரணையாக இனங்காணப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர் மூன்று பிரிவுகளினால் அதாவது TID, CID, CCD நான்காம் மாடியில் வைத்து விசாரிக்கப்படுவார்கள். இதற்கு பிரிவு-1, பிரிவு-2, பிரிவு-3 என்று பெயர். தற்போதைய நிலவரத்தின் படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் 14நாள், 28நாள், 03,06மாதங்கள் மற்றும் ஒரு வருடம், PD (கால்வரையறையின்றி) என்ற வரையறைக்குள் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் தடுத்து வைக்கப்படுவார்கள்.

நான்காம் மாடியில் தங்கியிருப்பதற்கு பன்னிரண்டு கம்பிக் கூடுகள் இருக்கின்றன. ஆறாம் மாடியில் எட்டு கம்பிக் கூடுகளும், ஆறாம் மாடிக்குக்கொண்டு வரப்படுபவர்கள் TID விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். நான்காம் மாடியில் இருப்பவர்கள் CID விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள், CCD என்பது விசேட பிரிவு. தனியொரு அறையிலேயே இவர்கள் வைத்து விசாரிக்கப்படுவார்கள். பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர் TID, CID, CCD என்ற அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். இந்த மூன்று விசாரணைகளிலும் ஒரே கருத்தினை ஒரு சந்தேகநபர்தெரிவிக்காதபட்சத்தில் அவர் பிழை செய்தவர் எனக் கருதப்படுவார். அதைவிடவும் ஆதாரங்களுடன் கைதுசெய்யப்படுபவர்கள் முள்ளுக் கம்பிகள், எஸ்லோன் பைப், கூரிய ஆயுதங்களால் குத்தப்படுதல், மின்சாரம் செலுத்தப்படுதல் போன்ற சித்திரவதைகளின் பின்னர் குற்றம் செய்யாதவர் என்ற பட்சத்திலும் குற்றம் செய்தவர் என்று ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அவர் நீதவான் முன்னிலையில் நிறுத்தப்படுவார். இதில் குற்றம் செய்தவர்களும் உண்டு, செய்யாதவர்களும் உண்டு.

இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் யுத்தத்தில் இருந்து தப்பி ஓடியதாகக் கருதப்பட்ட 4500 இராணுவத்தினரும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர். இதில் சரத்பொன்சேகாவின் விசேட கொமான்டோ படையணியைச் சேர்ந்த 85 வீரர்களும் உள்ளடக்கப்படுவார்கள். பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் அக்காலகட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் 1500 பேர் வரை பூசா, போஹம்பர, வெலிக்கடை, கொழும்பு ரிமான்ட், நீர்கொழும்பு போன்ற சிறைகளிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஐ.சி.ஆர்.சியினால் பதிவு செய்யப்பட்டு இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் இருந்து விடுதலைப்புலிகள் என்று பலர் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டனர். இவர்களை பராமரிக்கும் செலவாக ஐ.சி.ஆர்.சி 9000, 4000, 3500 முறையே இடங்களுக்கு ஏற்ப மாதக் கொடுப்பனவுகளை கைதிகளுக்கு வழங்கி உதவியிருந்தது. [illegible] பூசா முகாம் பொலிஸ் மற்றும் STF கட்டுப்பாட்டில் இருந்தது. பயங்கரவாதக் கைதிகளைத் தவிர பூசா முகாமில் எந்தவிதக் கைதிகளும் கிடையாது. ஏனைய சிறைச்சாலைகளில் கைது செய்யப்பட்டவர்கள் என அனைவரும் கலந்து இருந்தார்கள். பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு நான்காம் மாடி, ஆறாம் மாடி, பூசா போன்ற முகாம்களில் தான் ஆபத்து அதிகமாக இருக்கும். விசாரணையென்ற பெயரில் எந்தநேரமும் அழைத்துக்கொண்டு செல்வார்கள். இதற்கு காலவரையறை கிடையாது. அதன் பின்னர் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன், இவர்களின் மருத்துவ அறிக்கைகளில் தங்களை துன்புறுத்தவில்லை என்றும் கையொப்பம் இடச் சொல்வார்கள். அதன் பின்னர் புதுக்கடை, கொழும்பு நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்கு எமக்கு அனுமதி தேவையெனக்கூறி மீண்டும் சிறைகளில் தடுத்துவைக்கப்படுவார்கள். இவ்வாறானவர்களே மேற்குறிப்பிடப்பட்ட சிறைச்சாலைகளில் தொடர்ந்தும் இருந்து வருகின்றார்கள்.

இதனைவிட வடக்கு கிழக்கு அடங்கலாக 14 இரகசிய தடுப்பு முகாம்கள் இருக்கின்றன. இங்கேதான் இறுதி யுத்தத்தின் போது பிடிபட்ட மிக முக்கிய தளபதிகள், இடைநிலைத்தளபதிகள், நிர்வாக உறுப்பினர்கள் சித்திரவதை செய்யப்பட்டு உண்மைகள் பெறப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பின் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்டவர்கள் 11,000 பேர் இருக்கின்றார்கள். தற்பொழுதும் அவர்கள் விசாரணைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். வயது குறைந்த போராளிகளும் இருக்கின்றார்கள். சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய பயங்கரவாத தடைச்சட்டக் கைதிகள் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்படுவது சிறந்தது. அதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுமாக இருந்தால் அதைவிடச் சிறந்தது. இவர்களை விடுதலைசெய்யாத வரையில் இலங்கையில் இன்னும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இருக்கின்றது என்றால் அதாவது விடுதலைப்புலிகள் இன்னமும் எங்கோ மறைந்திருக்கின்றார்கள் என்று பொய்ப் பிரச்சாரங்கள் அரசினால் கூறப்பட்டு பயங்கரவாதச் தடைச்சட்டம் நீக்கப்படுவதற்கு அது முட்டுக்கட்டையாக இருப்பதுடன், அவர்களது விடுதலையும் தாமதப்படுத்தப்படுகின்றது. தற்பொழுது விடுதலைசெய்யப்பட்ட முப்பத்தியொரு சிறைக்கைதிகளில் அநேகமானோர் அண்மைய காலங்களில் கைது செய்யப்பட்டவர்கள்.

1990ம் ஆண்டு காலத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களும், அதற்கு இடை நிலைப்பட்டவர்களும் இன்னமும் விடுதலைசெய்யப்படவில்லை. விடுதலைசெய்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டுவதற்கான முக்கிய காரணம் இவர்கள் சிறையிலிருந்து வெளியே வந்தால் மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பித்து விடுவார்கள் என்பதே. தற்போதைய காலகட்டத்தில் சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகளை ஏதோவொரு தண்டனையை ஒப்புக்கொள்ளவைத்து 5,10,15 வருடங்கள் என அனுபவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். இது ஒருபுறம் இருக்க வெலிக்கடை, மகசின், CRP போன்ற சிறைச்சாலைகளில் வழக்குகள் எதுவுமின்றி அரசியல் கைதிகள் ஐநூறு பேர் வரை இருக்கின்றார்கள். இவர்கள் வெவ்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக அவர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டி அவர்களுக்கு பிணையும் வழங்காது 14,28நாட்கள் எனவும் 03மாதம் என்று தவணை கொடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இவ்வாறான நிலையை சீர் செய்வதற்கு சிறைச்சாலைகள் மறுசீர் அமைச்சு கைதிகளின் விபரங்களைத் திரட்டி சட்டமா அதிபருக்கு சமர்ப்பிப்பதன் ஊடாக அல்லது இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதன் ஊடாக கைதிகளின் விடுதலை விரைவில் சாத்தியப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது. அனைவருடைய கருத்தின்படியும் ஜே.வி.பியினருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுமாயின் ஏன் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கமுடியாது என்பதுவே. இதற்கான விடையை அரசாங்கம் தான் கூறவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் வடமாகாணசபை முதலமைச்சர், அமைச்சர்கள் அண்மையில் சந்திப்பொன்றை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில் அரசியல் கைதிகளினுடைய விடுதலை என்பது தொடர்ந்தும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. வெலிக்கடைச் சிறைச்சாலையைப் பொறுத்தவரையிலும் மகசீன், CRP போன்றவற்றில் உள்ள அரசியல் கைதிகள் பதினைந்து இருபது வருடங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மத்திய வங்கி குண்டு வெடிப்புத் தொடக்கம் ஹெப்பத்திக்கொல்லாவ, அனுராதபுரத் தாக்குதல், கொலன்னாவ தாக்குதல் போன்றவற்றுக்கு உடந்தையாக செயற்பட்டவர்கள் என்று கைது செய்யப்பட்டவர்களும் இதில் அடங்குவர். நீண்டகாலமாக அவர்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் சுவாமிபக்தர்களாகபல அரசியல்கைதிகள் மாறியிருக்கின்றார்கள். CRP (Colombo Remand Prison) சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் நூறு பேர் வரை உள்ளனர். இவர்கள் யுத்தகாலப்பகுதிகளில் அதாவது 2007,2008,2009ம் ஆண்டுகளில் கைதுசெய்யப்பட்டவர்கள். இவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டுக்கொண்டே இருந்தார்கள். அதிலும் வடிகட்டி எடுக்கப்பட்டவர்கள் மகசீன், மகர, பூசா போன்ற சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அரசியல் கைதிகளுக்கான உணவுப் பரிமாற்றங்களை எடுத்துக்கொண்டால் நேரத்திற்கு உணவு கிடைக்கும். குளிப்பதற்கான வசதிகள், குடிநீர் வசதிகள் என்பன மிகவும் சிரமம். 20 வருடங்கள் ஒருவர் சிறைவாசம் அனுபவிப்பதால் அவரது மனநிலை பாதிக்கப்படும். இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் தான் இந்த சிறைக்கைதிகள் இருக்கின்றார்கள்.

இதனை அனைவரும் புரிந்துகொண்டு சிறைக்கைதிகளின் விடுதலைக்காக தொடர்ந்தும் குரல் எழுப்புவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான ஒரு விடிவினைப் பெற்றுக் கொள்ள முடியுமே தவிர, வேறு எந்த தலைமைகளினாலும் அதனை நெறிப்படுத்த முடியாது. இன்று தமிழர் தரப்பு கைதிகளின் விடுதலைக்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இதிலும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாது போனால் போராடியே தமிழ் மக்களின் விடுதலையை பெற்றுக் கொள்ளவேண்டுமே தவிர வேறு வழியில்லையென்றே கூறலாம். இலங்கையில் மீண்டுமொரு இரத்தக் ஆறு ஓடுவதை தடுக்கவேண்டுமாக இருந்தால் அரசியல் கைதிகளுடைய விடுதலை அவசியமானதொன்று. சாத்வீக போராட்டங்களே ஆயுதப் போராட்டங்களாக உருவெடுத்ததென்பது வரலாறு.

நெற்றிப்பொறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளே - சிவமோகன் (பா.உ)

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், வைத்திய கலாநிதியுமாகிய சி.சிவமோகன் அவர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**கேள்வி:-** இன்று அனைவராலும் பேசப்பட்டுக்கொண்டிருக்கும் சிறைக் கைதிகளின் விடுதலை தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான நடவடிக் கைகள் என்ன?

**பதில் :-** அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை கடந்த வாரம் நானும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற மற்றும்வடமாகாணசபைஉறுப்பினர்களும் சென்று பார்வையிட்டோம். அவர்கள் நான்கு நாட்கள் உண்ணாவிரதமிருந்து மிகவும் சோர்வாகக் காணப்பட்டார்கள். இதற்கு முன்னர் தாம் உண்ணாவிரதம் இருந்தபோது விடுதலை செய்யப்படுவோம் என்கின்ற நம்பிக்கை தமக்கு இருந்தது என்றும்,பொதுமன்னிப்பின் அடிப்படையில் தாம் விடுதலை செய்யப்படுவோம் என்ற நம்பிக்கை தற்போது தமக்கு அற்றுப்போயுள்ளது எனவும் அவர்கள் எம்மிடம் தெரிவித்தார்கள். அரசியற் கைதிகளை இனங்கண்டு அரசு அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதே எமதும் கருத்து. இன நல்லிணக்கம் தொடர்பாக நாம் கதைத்துக்கொண்டிருக்கும் போது அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பில் நம்பிக்கைத்தன்மை இல்லை என்பதை அவர்கள் வெளிப்படையாகக் கூறுகின்றார்கள். நாங்களும் அதனை ஏற்றுக்கொள்கின்றோம். ஏனெனில் எங்களுக்கும் இவ்விடயமானது மன சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கேள்வி:-** கடந்த 07ஆம் திகதி அரசியற் கைதிகளை விடுதலை செய்வதாகக்கூறியபோதிலும் சட்டமா அதிபரின் அனுமதி இல்லாமல் விடுதலை செய்ய இயலாது எனக்கூறியதன் விளைவாக மீண்டும் அவர்கள் சிறைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இதனால் அவர்களின் நிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதே நேரம் த.தே.கூட்டமைப்பின் தலை வரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய சம்பந்தனும், சுமந்திரனும் நாட்டில் இல்லை. இருப்பினும் நீங்கள் இதற்கு என்ன நடவடிக்கையினை மேற்கொண்டிருக்கின்றீர்கள்?

**பதில் :-** இவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்பதன் காரணத்திற்காக கடந்த தீபாவளித் தினத்தினைகருப்புதீபாவளிஎன அறிவித்து த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற, வட மாகாணசபை உறுப்பினர்கள் இணைந்து எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தோம். மேலும் கடந்த வெள்ளிக்கிழமை கடையடைப்புடன் கூடிய ஹர்த்தாலும் வடகிழக்கில் அனுஷ்டிக்கப்பட்டது. முடிந்தளவு எங்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். கைதிகள் விடுதலை தொடர்பில் அரசியல் மற்றும் சட்ட ரீதி யாகநோக்கப்படலாம். அரசுபெரும்பாலும் இதனை சட்ட ரீதியில்தான் நோக்க விரும்புகின்றது. அது தவறு. சட்ட ரீதி யாக நோக்குமிடத்து அதில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடும். இதனை ஒரு அரசியல் விடயமாகக்கொண்டு அரசியல் ரீதியாக இவர்களுக்கான பொதுமன்னிப்பினை வழங்கவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

**கேள்வி:-** இன்று தென்னிலங்கை அரசியல்வாதிகளைஎடுத்துக்கொண்டால் விடுதலைப்புலிகளைஒருபயங்கரவாதிகள் என்றுதான் சித்தரிக்கின்றார்கள். இவ்வாறு கூறிக்கொண்டிருந்தால் கைதிகளின் விடுதலைக்குக்கூட ஒரு முட்டுக்கட்டையாக அமைந்துவிடும். விடுதலைப்புலிகளை நீங்கள் ஏகபிரதி நிதிகளாக ஏற்றுக்கொண்ட பின்னரே இந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்தது. இவ்வாறிருக்க, இன்று அவர்கள் பல்வேறு சிறைகளில் பல வருடங்களுக்கு மேலாக எந்தவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை விடுவிப்பதற்குத் தடையாக இருப்பவை எவை என நினைக்கிறீர்கள்?

**பதில் :-** விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக தமிழ் மக்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச நாடுகளும், சிங்கள அரசும் கூட ஏற்றுக்கொண்டுள்ளன. எவ்வாறெனில் அதனால்தான் சர்வதேச ரீதியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றது. ஆதாரங்களாக ஒஸ்லோ சமாதானப்பேச்சுக்களில் இவர்கள் ஒரே . மேடையில் இருந்து அவர்களுடன் போர்நிறுத்த ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்தார்கள். அமெரிக்கா,நோர்வே போன்ற நாடுகளின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது. விடுதலைப்புலிகளது செயற்பாடுகள் தற்போது மௌனிக்கப்பட்டதற்காக அவர்கள் தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள் இல்லை எனக்கூறிவிடமுடியாது. தமது சுயலாப அரசியலை முன்னெடுப்பதற்காக அவ்வாறு கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இக்கருத்தானது பொதுவாக நோக்குமிடத்து ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்று.

**கேள்வி:-** ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி இவர்களை விடுதலை செய்வதில் இருக்கும் தடைகள் அல்லது சட்டமா அதிபர் திணைக்களம் இவர்களின் விடுதலை தொடர்பில் கொண்டிருக்கும் தடைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

**பதில் :-** சட்ட ரீதியில் இதனை அணுகும்போது மூன்று வகை யாகப் பார்க்கலாம். தண்டனை வழங்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். தண்டனையை இரத்துச்செய்து விடுதலை செய்யும் அதிகாரம் நேரடியாக ஜனாதிபதிக்கு இருக்கிறது. இன்னும் சிலர் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இவர்களை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்யக்கூடியதாகவிருக்கின்றது. மற் றையது இன்னமும் வழக்குத்தாக்கல் செய்யப்படாத நிலையில் இருக்கிறார்கள். இவ்வாறானவர்களுக்கு சட்டத்தின்படி பொதுமன்னிப்பின் அடிப்படையில் புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்யமுடியும். சட்ட ரீதியில் இவ்வாறான விடயங்கள் உள்ளதால்தான் அரசியல் ரீதியாக இதற்கான தீர்வுகளை வழங்குங்கள் எனக் கேட்டிருக்கின்றோம். எமது பிரச்சினைகள் ஐ.நா வரை கொண்டுசெல்லப்பட்டு இனப்படுகொலைதான் இடம்பெற்றது என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கான ஆதாரங்கள் ஐ.நா சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. போர்க்குற்றம், இனப்படுகொலை இடம்பெற்றிருக்கின்றபோது பழைய விடயங்களை மறந்து ஒரு இனநல்லிணக்கத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நேரம் ஒரு சுமு கமான வாழ்வினை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் இருக்கும்பொழுது, சிறுவிடயங்களைக்கூட அரசு தமிழ் மக்களுக்காக மேற்கொள்ள முன்வரவில்லை என்பது எமக்கு ஏமாற்றமே. அநுராதபுர சிறையில் 64 வயது மதிக்கத்தக்க ஒருவர் இருக்கின்றார். ஒருவர் பாதையினைக் காட்டுமாறு கேட்டதாகவும் அதற்கு அவர் பாதை யைக் காட்டியதுதான் குற்றமாகக் கருதப்பட்டிருக்கிறது. அவர் சுமார் 15 வருடங்கள் சிறையில் இருக்கின்றார். பாதையினைக் காட்டுவது குற்றம் என்று சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றதா? இதனைப்போன்று தேவையற்றமுறையில் பலர் பயங்கரவாத தடைச்சட்டத்தின மூலமாக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

**கேள்வி :-** யுத்தம் நிறைவடைந்து 06ஆண்டுகளைக் கடந்துள்ள நிலை யிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை நீக்கியிருக்கிறார்கள். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. குறிப்பாக அரசியற்கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படும் பொழுது மீண்டும் அவர்களை கைதுசெய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதல்லவா? எனவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கி அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எதிர்க்கட்சியாகிய நீங்கள் முன்னெடுக்கவில்லையா?

**பதில் :-** இந்த சட்டத்தினை நீக்க வேண்டும் என்று ஐ.நாவிலும் ஒரு சரத்து உள்ளது. சர்வதேச அரங்கிலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. என்னைப்பொறுத்தவரையில் இந்த சட்டத்தை நீக்காதவரை, தமிழர்கள் மீதான அடக்குமுறையை பிரயோகிப்பதற்கான ஆயுதமாகவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை இவர்கள் கருதுகிறார்கள். இச்சட்டத்தினை நீக்கிவிட்டால் தங்களை மீறி செயற்பாடுகள் அமைந்துவிடும் என்று அச்சம் கொள்கின்றார்கள். தமிழ் மக்களது பலமாக விடுதலைப்புலிகள் இருந்தார்கள். அவர்களது ஆயுத பலம் அழித்தொழிக்கப்பட்டதன் காரணத்தினால் தமிழர் தரப்பில் ஒரு வெற்றிடம் உருவாகியிருக்கின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் பொறுத்த வரை எமக்கு இருக்கும் அதிகாரங்களை செயற்படுத்த இயலாத ஒரு கட்சியாகவே நாம் இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:-** பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பது பற்றி பாராளுமன்றில் வலியுறுத்திக் கூறியிருக்கின்றீர்களா?

**பதில் :-** ஆம் கூறியிருக்கின்றோம். ஆனால் இன்னமும் நடை முறைப்படுத்தப்படவில்லை. இதற்கு பதிலளிப்பது அரசினது கைகளில்தான் இருக்கிறது. இன நல்லிணக்கத்தினை நோக்கி அரசியல் மாற்றங்களை கொண்டுவரவேண்டும் என்று அரச தரப்பிலிருந்து தகவல்கள் வருகின்றன. எம்மிடமும் இவ்விடயம் தொடர்பாக அரசு கருத்துக்களை கேட்டிருக்கின்றது. இதன் ஊடாக பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு.

**கேள்வி:-** ICRCயின் தகவலின் அடிப்படையில் 250இற்கும் மேற்பட்ட கைதிகள் 14 சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இந்த சிறைச்சாலைகளுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாகிய நீங்கள் விஜயம் செய்திருக்கின்றீர்களா?

**பதில் :-** வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நான் உட்பட எமது சக பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட 14 சிறைச்சாலைகளுக்கும் விஜயம் மேற்கொண்டிருக்கின்றார்கள். இவ் விஜயமானது சிறைக்கைதிகளின் மனதை ஆற்றுப்படுத்தும் நோக்கிலேயே அமைந்திருந்ததே தவிர, எவ்வாறாயினும் இவர்களின்விடுதலைக்காகநாம்தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:-** கடந்த வாரங்களில் த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற மற்றும் வடகிழக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் தமிழ் அரசியல் கைதி களின் விடுதலை தொடர்பில் ஆவே சமான வார்த்தைகளையும், சாத்வீக உண்ணாவிரதப் போராட்டங்களை ஆரம்பிப்போம் எனக் கூறியிருந்தார்கள். அதில் செல்வம் அடைக்கலநாதனும் ஒருவர். தற்போதைய நிலையில் நீங்கள் உண்ணாவிரதம் இருந்து கைதிகளின் விடுதலையினைப் பெற்றுக்கொடுக்கும் செயற்திட்டங்களில் களமிறங்கவில்லையா?

**பதில் :-** உண்ணாவிரதம் இருக்கமுடியாது என்றல்ல. அதற்கு முன்னர் சில போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். வவுனியாவில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்திருக்கின்றோம். உண்ணாவிரதம் ஒன்றினை மேற்கொள்ளவேண்டும் என எண்ணியிருந்தபோதுதான் அரசிற்கான முதலாவது எச்சரிக்கையாக கைதி களை விடுவிக்கவேண்டும் என்ற அடிப்படையில் ஒரு நாள் ஹர்த்தாலினை அனுஷ்டித்திருக்கின்றோம். இதன் ஊடாக சர்வதேச நாடுகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம். போராட் டங்களில் பல்வேறான வகைகள் இருக்கின்றது. படிப்படியாக அவற்றை நாம் முன்னெடுப்போம்.

**கேள்வி:-** இதுவரையில் அரசியற்கைதிகள் தொடர்பான விபரங்களைத்திரட்டி அவை தொடர்பாக சட்டமா அதிபருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களின் விடுதலையை துரிதப்படுத்துவது என்பது தவறாகிவிடுமா? அவ்வாறானதொரு நிலைப்பாட்டினை ஏன் உங்களது கட்சி மேற்கொள்ளவில்லை?

**பதில் :-** அவ்வாறான தகவல்கள் என்னிடம் இல்லை. கட்சியில் வேறு யாராவது எடுத்தார்களா என்பது எனக்குத் தெரியாது. தகவல்கள் எடுப்பதிலும் பல பிரச்சினைகள் உண்டு. ஒருசிலரது தகவல்களை அவர்களின் உறவினர்களிடமிருந்து பெற்றிருக்கின்றோம். 300 கைதிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கான சட்டத்தரணிகளிடமே அவர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளன. அவற்றை சட்டத்தரணிகள் எம்மிடம் தெரியப்படுத்துவார்களா என்பதிலும் சிக்கல்கள் உள்ளது. சட்டத்துறையினரைப் பொறுத்தவரை தமது வழக்குகளை நீதிமன்றில் வென்று கொடுக்கவேண்டும் என்பதையே விரும்புவார்கள். அனைவரைப்பற்றியும் கருத்திற்கொள்ளமாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:-** கைதிகளின் விடுதலை தொடர்பில் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் நிலைப்பாடு என்ன?

**பதில் :-** கட்சிகள் தொடர்பில் நாம் கலந்துரையாடவில்லை. பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் நாம் கலந்துரையாடியிருக்கின்றோம். அவரைப் பொறுத்தவரை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடாகும். இருப்பினும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று நீதிமன்றிற்கு அழைத்துச்செல்லப்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்படாது மீண்டும் சிறையில் தடுத்துவைத்திருக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் எமது உறுப்பினர்களுக்கு ஈடுபாடுகள் தொடர்ந்தும் இருக்கும் என நினைக்கின்றேன்.

**கேள்வி:-** கடந்த 07ம் திகதி சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் நாட்டில் இல்லாத காரணத்தினால் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அதற்கடுத்த நிலையிலுள்ளவர்கள் ஏதாவது நடவடிக்கையினை மேற்கொண்டார்களா?

**பதில் :-** இது தொடர்பாக மாவை சேனாதிராஜா அவர்களுடன் உரையாடியபோது தாம் அதனை முன்னெடுப்பதாகவும் கைதிகளை கட்டம் கட்டமாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியினை வழங்கியிருக்கின்றார்.

09ஆம் பக்கம் பார்க்க...

நேர்காணல்:- இரணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வடகிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்க அரசு ஏன் தயங்குகிறது

இந்திய அரசியல் சட்ட திட்டங்களின்படி இலங்கையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கடந்த 1987ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து பேச்சுக்கள் இடம்பெற்றுவந்தன. ஆனால் அவை கைகூடவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தருவதாகக்கூறியே வடகிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெற்றது. வடமாகாணசபையை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்த அதிகாரங்கள் இருந்தும் அவ்வதிகாரங்கள் செயலிழக்கப்பட்டதாகவே அமைந்துள்ளது.

வடகிழக்கில் மக்கள் வாழும் பகுதிகளை எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு 40 சதவிகிதம் இராணுவத்தின் தேவைகளுக்காக காணிக அபகரிப்புக்கள் இடம்பெற்றுள்ளது. உயர் பாதுகாப்பு வலயங்கள் எனக்கூறி ஒருசில பிரதேசங்களும், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் அமைப்பதற்கான பிரதேசங்களுக்கு என இவை அபகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனைத் தட்டிக்கேட்கும் அதிகாரம் வடகிழக்கு மாகாணங்களுக்கு இருந்தும் அதனை செயற்படுத்தப்போனால் அவர்களுடைய பதவிகளுக்கு ஆபத்தினை விளைவிக்கும் செயற்திட்டங்களை அரசாங்கம் மறைமுகமான முறையில் கையாண்டு வருகின்றது.

தமிழ் மக்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக வடகிழக்கு மாகாணங்களில் தமிழ்பேசும் மக்களின் ஆதிக்கத்தினைக் குறைப்பதற்காக பகுதி பகுதிகளாக கட்சிக்குள்பிரிவினைகளை உருவாக்கி தாம் நினைத்தவர்களுக்கு உயர் பதவி களை வழங்கி கூட்டமைப்பின் பலத்தினை இல்லாதொழித்து பிரிவினை ஏற்பட்டிருக்கின்றது என்பதை திரிபுபடுத்தி அரசாங்கம் இன்றுவரை சர்வதேசத்திற்கும், இலங்கையில் வாழ்கின்ற அரசியல் இராஜதந்திரிகளுக்கும் வெளிக்காட்டிக்கொள்கின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், வடமாகாண சபையும் வெவ்வேறு எனப்பிரித்துக் காட்டுவதில் அரசாங்கம் செயற்படும் உள்நோக்கம், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இவர்களுக்கு வழங்கிவிட்டால் தமிழீழம் வழங்கியதற்குச் சமனாகிவிடும். தமது சர்வாதிகாரத்தினை தமிழினத்தின் மீது தொடர்ந்தும் செயற்படுத்த இயலாத சூழ்நிலைகள் உருவாகும். அதுமட்டுமல்லாது சர்வதேச நாடுகளின் உதவியுடன் வடகிழக்கு பாரிய அபிவிருத்தியினைக் கண்டு சிங்கப்பூர் நாட்டினைப்போல் மாற்றம் பெற்றுவிடும் என்கின்ற அச்சமே. இலங்கை சுதந்திரமடைந்து 1948லிருந்து இன்றுவரை தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கு தீர்வுகள் எட்டப்பட்டிருக்கின்றதா என்றால் இல்லை. இந்நாட்டை 05 ஆட்சியாளர்கள் ஆட்சி செய்திருக்கின்றார்கள். சர்வதேச நாடுகளுடன் பல்வேறு கட்டப் பேச்சுக்கள் தந்தை செல்வா மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் நடைபெற்றது. இதனது பெறுபேறுகளைப் பார்க்கின்றபொழுது தேசியம். நல்லிணக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இவை ஒரு சம்பிரதாயமான முறையாகவும். கண்துடைப்பாகவுமே இடம்பெற்றுள்ளது. தற்போது அடுத்த நிலையிலிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவரும், த.தே.கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தன் அவர்களது ஆட்சிக்குப் பின்னர் அடுத்த நிலை தலைவர்கள் எவ்வாறு செயற்படப்போகிறார்கள் என்ற அச்ச நிலைப்பாடும் இருந்துகொண்டிருக்க, தமிழ் மக்களுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை அரசாங்கம் வழங்கி சிறைக்கைதிகளையும் விடுதலைசெய்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் இந் நாட்டிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்பது இரா.சம்பந்தனது நம்பிக்கை.

அடிக்கடி சம்பந்தன் அவர்கள் இந்தியா சென்றுவருவது அனைவரும் அறிந்தவொன்றே. காரணம் என்னவெனில் வட மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுத்தருவதாக இந்தியா கூறிய தால் தேர்தல் களத்தில் ஈடுபட்டார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினார். ஆனால் இன்றுவரை ஆக்க பூர்வமான தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டதா? என்றால் ஒன்றுமில்லை. இந்தியா தனது தேவைக்காகஇலங்கைத்தமிழர்களை பயன்படுத்தி வருகின்றது என்பதே உண்மை. விடுதலைப்புலிகளை மாத்திரமல்ல. ஏனைய ஆயுதக் கட்சிகளையும் உரமூட்டி ஊக்கம் கொடுத்து வளர்த்தது இந்தியரசு. அதன் பின்னர் இடம்பெற்றவைகள் நாம் அறிந்த நீண்ட வரலாறு.

விடுதலைப்புலிகளுடைய பாரிய வளர்ச்சியானது இந்தியாவிற்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்கியதன் காரணமாக விடுதலைப்புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்டார்கள். அல்லது அவர்களது போராட்டம் மௌனிக்கப்பட்டது. தற்போது யுத்தம் நிறைவடைந்து 06ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் இன்னமும் தமிழ் மக்களுக்கான தீர்வினை இந்தியரசாங்கம் பெற்றுக்கொடுக்க முன்வரவில்லை. முள்ளிவாய்க்கால் இறுதியுத்தம் மற்றும் இனப்படுகொலைகள் என்பன நடைபெற்று காலங்கள் உருண்டோடிவிட்டன. ஒரு இலட்சத்திற்கும்அதிகமானோர் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள் எனக்கூறியபோதும் அதற்கான தீர்வுகள் இதுவரை இல்லை. தமிழர் செறிந்துவாழக்கூடிய வெளிநாடுகளிலும் தேர்தல்கள் வரும்பொழுது அந்நாட்டு தலைவர்கள், விசேட பிரதிநிதிகள் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை நடாத்துவது ஒரு நிகழ்வே தவிர, அது மாற்றத்திற்கான வழிகளை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

நோர்வே இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டபோது விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் செயற்பட்டது. கருணா-பிரபா பிளவுகளை ஏற்படுத்த முக்கிய காரணமாக ரோ செயற்பட்டு வந்தது. இவர்களுடைய பிளவுகள் ஏற்படுத்தப்படாவிட்டால் இன்றும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும். அல்லது சிறந்த தீர்வுகள் எட்டப்பட்டிருக்கும். அரசாங்கத்தினை பலவீனப்படுத்திய நிலையிலேயே விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குச் சென்றனர். சர்வதேச நாடுகளும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டன. தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள் தமிழ் மக்கள் தான் என்பதற்கு இதுவொரு சிறந்த உதாரணமாகும். அக்காலத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் ஏன் சர்வதேச நாடுகள் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கக்கூடாது. அக்காலத்தில் அரசியல், ஆயுத ரீதியாக விடுதலைப்புலிகள் பலமாக இருந்தனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவக் கட்சிகள் இருக்கின்றன. இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டதன் பின்னரே தமது செயற்பாடுகளில் ஈடுபட்டனர். சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன் போன்றோர் விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகள் எனக்கூறுவது நகைப்புக்குரியது. நிலைமைகள் இவ்வாறிருக்க காலத்தின் தேவைக்கேற்ப அரசியல் மாற்றங்களை உருவாக்கிக் கொள்வதுதான் சர்வதேச நாடுகளின் சதிவலைப் பின்னலாகும். இலங்கையில் தமது ஏற்றுமதி இறக்குமதியை சரியானமுறையில் நடைமுறைப்படுத்துவதே இந்தியாவின் தேவை. தமது கட்டுப்பாட்டுக்குள் இலங்கை இருக்கவேண்டும். அதற்காகவே 1987ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கைதீவில் ஆயுதக்கட்சிகளுக்கு பலம் சேர்த்துக்கொடுத்தது இந்தியரசு. இறுதியில் இந்தியாவிற்கே அது அபாயகரமானதாக அமைந்தது. அந்த நிலையில்தான் இன்றுவரை இந்தியரசு இலங்கை அரசியலை உற்றுநோக்கிக்கொண்டிருக்கிறது.

இறுதி யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை விடுதலைப் புலிகளை முற்றாக அழித்தொழிக்கும் நோக்கில் இந்தியா செயற்பட்டது. அதன்பின்னர் தமிழினத்திற்கு சில அபிவிருத்தித்திட்டங்களை துரித கதியில் வடகிழக்குப் பகுதிகளுக்கு என செயற்படுத்திய இந்தியரசு தனது அரசியலை ஆங்காங்கே பலப்படுத்திக்கொண்டதுடன், இனப்படுகொலை என்ற பேச்சுக்கே இடமளிக்கவில்லை. தமிழ் நாட்டிலுள்ள ஒருசில தலைவர்கள் குரல்கொடுத்த போதிலும் மத்திய அரசு அதற்கு உடன்படவில்லை. இறுதி யுத்தத்தினை முன்னெடுத்துச் சென்றது இந்தியா என்கின்றதே அதற்கு முக்கிய காரணம்.

இந்திய அரசு கூட பேச்சளவில் வடகிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று உத்தியோகபூர்வமான முறையில் இதுவரை கூறவில்லை. இலங்கைத்தீவில் தங்களுடைய காலணித்துவத்தை ஏற்படுத்த முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் வடகிழக்கு மாகாணசபைகள் தமது அதிகாரத்திற்குட்பட்ட பல தீர்மானங்களை இதுவரையில் நிறைவேற்றியிருக்கின்றது. எனினும் ஒருசிலவற்றைத் தவிர ஏனையவை கிடப்பிலேயே இருக்கின்றன. இனப்படுகொலை என்ற தீர்மானம் வலுச்சேர்த்துள்ள நிலையில் தற்போது அரசிற்கு அது பெரும் இக்கட்டான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனால் வடமாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் முறுகல் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசும் கண்சாடையாக இலங்கைமீது தனது செயற்பாடுகளை செயற்படுத்தியதன் மூலம் தமிழக அரசினையும் வடக்கு முதலமைச்சர்பகைத்துக்கொண்டார். இதனால்தமிழக அரசுவெறுப்படையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்தியரசானது தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்த்துவைக்கவேண்டும் என எண்ணியிருந்தால் அதனை என்றோ செயற்படுத்தியிருக்க முடியும். இன்று விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையின் பின்னரும் தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வுகளைப் பெற்றுத்தராது போனால் இனி வரும் காலங்களிலும் பெற்றுத் தரப்போவதில்லை என்பதே உண்மை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைக் கூட இன்னமும் நீக்கமுடியாத சூழ்நிலையில் அடுத்தகட்டப் பேச்சுக்களைப் பேசுவதன் மூலம் ஒரு அச்சுறுத்தலுடனான தீர்வினையே பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். சர்வதேச நாடுகள் இலங்கை மீதான தலையீட்டினைக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்பதிலும் இந்தியா அக்கறை கொண்டுள்ளது. ஆகவே இலங்கைக்கு அமெரிக்கா மற்றும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள இயலாத நிலையும் உள்ளது. ஆசியப்பிராந்தியத்தில் தனது சர்வாதிகாரத்தினைக் கொண்டிருக்கும் இந்தியா, அதேபோன்று ஐரோப்பியப் பிராந்தியத்தில் தனது சர்வாதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா. இந்த இரண்டுமே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை முடக்குவதும் தனது நிகழ்ச்சிநிரலுக்கேற்ப அவர்களை செயற்படுத்திக் கொண்டிருப்பதுமே அவர்களது சர்வதேச சூழ்ச்சிகளில் ஒன்று.

குறிப்பாக உதவிகளை வழங்குவதன் மூலம் தமது நிகழ்ச்சி நிரலை இலங்கை அரசின் மீது திணித்துக் கொள்கின்றார்கள். கடனுக்குமேல் கடனாக இன்று இலங்கை உள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சீனாவிற்கு இந்த நாட்டைத் தாரைவார்த்தார். ஆனால் இன்று ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அமெரிக்கா. இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த நாடு தாரை வார்க்கப்பட்டிருக்கின்றது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வினை வழங்குவோம் எனக்கூறிக்கொண்டிருக்கும் இந்தியா சமாதானம் ஒருபுறத்திலும், மறுபுறத்தில் யுத்தத்தின் தன்மையையும் இலங்கையில் ஏற்படுத்தி வைத்திருக்கின்றது. பிரபாகரனுடைய தலைமையில் இல்லாது வேறு யாருடைய தலைமையிலாவது மீண்டும் விடுதலைப்புலிகளை இயங்கவைத்து தனது நாட்டின் தேசிய பாதுகாப்பினை தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கிறது. ஆகவேதான் வடகிழக்கு மாகாணகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டி வருகின்றது எனலாம்.

சுழியோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதற்கிடையில் இன்னுமொரு அணுகுண்டாக சுமந்திரன் அவர்கள் வடக்கிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றியமை குறித்து குறிப்பிட்டிருந்தார். இது தடியைக்கொடுத்து அடிவாங்கும் ஒரு செயற்பாடாகவே அமையப்பெறுகின்றது. ஒரு அரசியல் வாதிக்கு இடம், பொருள், ஏவல் என்பது முக்கியம். வாதத்திறமையினால் குற்றங்களை மூடிமறைத்து குற்றவாளியை நிரபராதி என்று வெளியேற்றும் தொழிலைச் செய்து வந்த சுமந்திரனுக்கு தனது வாய்த்திறமையால் எதையும் கையாள முடியும் என்று நினைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். ஊடகங்கள் கேட்டால் என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லுங்கள் என்று கேட்கின்றார். நேரடி விவாதத்துக்குஊடகங்கள்தயாராகத்தான் இருக்கின்றது.

பொது இடங்களில் தமிழர்களுடைய தன்மானத்தை விற்பவர்களுடன் பேசுவதன் மூலம் பயன் ஒன்றுமில்லை என ஊடகங்களும் எண்ணவேண்டியுள்ளது. கட்சிக்குள் சரி பிழை இருப்பது வழமை. முதலமைச்சராக இருக்கும் ஒருவரை இவ்வாறு அவதூறாக குற்றஞ்சாட்டுவது என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் அளவுக்கு சுமந்திரனுடைய அரசியல் போக்கு செல்லுமாக இருந்தால் நீண்டகாலம் அவருடைய அரசியல் பயணம் தொடரமாட்டாது என்பதே இதனுடைய உண்மைத் தன்மையாகும். வழிதவறி செயற்பட்ட அரசியல் வாதிகளுக்கு கடந்த காலங்களில் நடந்தது என்ன என்பதும் அவருக்கு நன்கு தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் இவரிடம் கேள்விகளைக்கேட்டால் இது எங்களுடைய தனிப்பட்டக் கருத்து என்று கூறி ஏனைய அரசியல்வாதிகளை மட்டம் தட்டுவது, அவர்கள் மீது குறை கூறுவது வழக்கமாகிவிட்டது. தொடர்ந்தும் வரலாற்றுத் துரோகத்தை செய்வதன் ஊடாக தமிழ் மக்களுடைய சாபத்துக்கு ஆளாவதோடு உண்மை கண்டறியப்பட்டு அதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமே தவிர, சுமந்திரன் அவர்கள் தன்னிச்சையாகக் கருத்துக்களைக்கூறி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும், வடமாகாண சபையையும் பிரித்தாளும் நோக்கத்தைக் கைவிட வேண்டும். படித்தவர்கள் கட்சியில் தேவைதான். அதற்காக சோரம் போகும் அரசியலைமேற்கொண்டால்அதனுடைய விளைவுதான் என்ன? சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

**கேள்வி:-** இனப்படுகொலை, கைதிகள் விடுதலை தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் வடமாகாண சபையில் தீர்மானங்களை கொண்டுவந்த நிலையில், அவுஸ்திரேலியாவில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் முதலமைச்சரை கட்சியிலிருந்து நீக்கவேண்டும் எனக்கூறியிருப்பது, த.தே.கூட்டமைப்பையும், வடமாகாணசபையையும் பிரித்துப்பார்க்கும் செயற்பாடாக அல்லவா அமைகின்றது. இதுபற்றி?

**பதில் :-** ஊடகங்களில் வெளிவந்த செய்திகளைக்கொண்டு இதற்குப் பதில் வழங்க என்னால் இயலாது. வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என த.தே.கூட்டமைப்பு கூற முடியாது. சுமந்திரனின் தனிப்பட்ட கருத்தினைக்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கமுடியாது.

**கேள்வி:-** இனப்படுகொலை இடம்பெறவில்லை என்றும் வடமாகாண சபையில் இனப்படுகொலைதான் இடம்பெற்றது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதும் முரணான கருத்தாக அமைவதால் இதனை கைதிகளின் விடுதலை தொடர்பில் சிங்கள தேசம் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் அல்லவா?

**பதில் :-** கைதிகளின் விடுதலை தொடர்பில் த.தே.கூட்டமைப்பின்பாராளுமன்றமற்றும் வடமாகாண சபையின் உறுப்பினர்கள் என இணைந்துதான் ஹர்த்தாலைக் கூட ஒழுங்குபடுத்தியிருக்கின்றோம். இவ்வாறு பிரித்தாளும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றதான கருத்துக்களை தெரிவத்தவர்கள் நாடு திரும்பியவுடன் நீங்கள் அவர்களிடமே உங்கள் கேள்விகளைக் கேட்கமுடியும். இது எனது கருத்து.

**கேள்வி:-** ஹர்த்தாலின் ஊடாக சிங்கள பேரினவாதிகளுக்கு நீங்கள் கூறவிரும்பும் செய்தி என்ன?

**பதில் :-** நல்லிணக்கம் என்ற அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் சென்றுகொண்டிருக்க மீண்டும் போராட்டங்களை அவர்கள் எதிர்பார்க்கின்றார்களா என்பதை அரசு தான் சிந்திக்கவேண்டும். எம்முடன் இவர்கள் இணைந்து எமக்கான விடுதலைகளைத்தராதவிடத்து சாத்வீகப் போராட்டமானது வேறுவேறான வடிவங்களில் மாற்றம் பெறலாம். அது இன முறுகலையே தோற்றுவிக்குமே தவிர நல்லிணக்கத்தைக் கொண்டுவராது. இன நல்லிணக்கம் தேவையாகவிருந்தால் இவ்வாறான நடவடிக்கைகளை இந்த அரசு கைவிடவேண்டும் என்றே கூறுகின்றோம்.

**கேள்வி:-** ஹர்த்தால் அனுஷ்டிப்பதன் ஊடாக மீண்டும் ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கும் செயற்பாடாக இது அமையப்பெறாதா?

**பதில் :-** எங்களுக்கு அநீதிகள் இழைக்கப்படும்போது மௌனிகளாக இருக்கமுடியாது. ஆயுத பலம் இல்லாதுவிட்டால் சாத்வீக ரீதியில் போராட்டங்களை முன்னெடுகக்வேண்டும். எறும்பின் மீது கால்பட்டால் கடிக்கத்தான் செய்யும் அதுபோலவே எம்மீது அவர்கள் மிதித்தால் நாமும் எதிர்க்கத்தான் வேண்டும்.

**கேள்வி:-** இறுதியாக தமிழ் அரசியல் கைதிகளுக்கு கூறும் செய்தி என்ன?

**பதில் :-** ஒட்டுமொத்த கைதிகளும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதுதான் எமது அவா. அதற்காக நாம் உங்களுக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி விடுதலையை முன்னெடுப்போம். புனர்வாழ்வு அளிக்கப்பட்டாவது உங்களுக்கான விடுதலையைப் பெற்றுக்கொடுப்போம் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

ரவூப் ஹக்கீம் அவர்கள் மஹிந்த அரசில் நீதி அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலேயே தேசத்தின் பல்வேறு இடங்களில் பள்ளிவாசல்கள் நகர்க்கப்பட்டு இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டதோடு அம்மக்கள் மீது சிங்களக் காடையர்கள் வன்செயல்களை மேற்கொள்வதற்கும் தூபமிடப்பட்டிருந்தது. இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்ற போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் , அவர்களும் ஏனைய மஹிந்தவின் வால்பிடிகளான இஸ்லாமிய அரசியல்வாதிகளும் சாமான்ய இஸ்லாமியக் குடிமக்களின் சுயமரியாதையைப் பாதுகாக்க வக்கற்றவர்களாக நிகழ்வுகள் தொடர்பில் பூசி மெழுகிக் கருத்துக்களை வெளியிட்டு அக்குடிமக்களின் காதுகளில் பூச்சுற்றிவிட்டுத் தாம் தப்பிக்கொண்டது மட்டுமல்லாமல் தம்முடைய பதவிகளையும் மிகுந்த கரிசனையோடு தற்காத்துக் கொண்டார்கள்.

பெருமளவுசிங்களமக்கள்வாழுங் கிராமங்களில் மிகக் குறைந்த தொகையினராக வாழும் இஸ்லாமிய மக்கள் தாம் தொழுகையில் ஈடுபடுவதற்காக அமைந்த பள்ளிவாசல்களையே அக்கிராமங்களிலுள்ள பௌத்த கடும்போக்கு உணர்வுகொண்ட பிக்குமார் இல்லாமல் அழித்தொழிக்கும் கயமைத்தனங்களில் ஈடுபட்டார்கள் என்பதே உண்மையாகும். இவ்வவல நிலையில் மஹிந்த அவர்களோடு ஒட்டி உறவாடி அமைச்சுப் பதவிகள் அளித்த சுகத்தில் தன்னிலை மறந்து இறும்பூய்தெய்திய இஸ்லாமிய அரசியல் தலைவர்கள் தாம் அணிந்திருந்த நீல அங்கியை அகற்றித் தூர வீசிவிட்டுத் தற்போது பச்சை வஸ்திரத்தைப் பூண்டு பகட்டாகப் பவனியாக வந்துகொண்டிருக்கின்றார்கள். எவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி என்னும் முகமூடியோடு பரந்துபட்ட சாமானியத் தமிழ்க் குடிமக்கள் தமது எதிர்வர்க்கத்தினருக்குச் சிறிதளவேனும் ஈவிரக்கமில்லாமல் காட்டிக்கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்களோ அவ்வாறே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்னும் முகமூடியோடு இஸ்லாமியச் சாமானியக் குடிமக்களும் அதே ஈவிரக்கமின்றியே தம்முடைய எதிர் வர்க்கத்தினருக்குக் காட்டிக்கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

கருங்கக்கூறின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மைத்திரி அவர்கள் சுதந்திரக் கட்சிக்குச் சார்பாகப் பிரச்சாரம் செய்யின் தற்போது ஐ.தே.க வசமுள்ள உள்ளூராட்சிச் சபைகளையும் சுதந்திரக் கட்சி கைப்பற்றுவதோடு அக்கைப்பற்றுகையானது, அடுத்த நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் மீண்டும் மஹிந்த தரப்பினர் ஆட்சியில் அமர்வதற்கு அடிப்படையாக அமைவதோடு மேற்குறிப்பிடப் பட்டவாறான கள அமைவுகள் தோற்றம் பெறுவதற்கும் காரணியாக அமையும் எனலாம்.

கிளிநொச்சியில் பெண் தலைமைத்தாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களின் மேம்பாட்டிற்கான தேசிய நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. காலை பத்து மணிக்கு கிளிநொச்சிக்கு வருகை தந்த பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார மேற்படி நிலையத்தினை திறந்து வைத்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்திற்கு அருகில் மேற்படி நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் ஜனவரி மாதம் கிளிநொச்சி வருகைதந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கிளிநொச்சியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின்போது பெண்களின் நலன்களை அடிப்படையாகக்கொண்டு அவர்களின் முன்னேற்றத்திலும். பாதுகாப்பிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தேசிய நிலையம் ஒன்றினை கிளிநொச்சியில் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் குறித்த நிலையம் திறந்து வைக்கப்பட்டதோடு. தெரிவு செய்யப்பட்ட சில பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டது. நிலையமானது. தேசிய நிலையம் என்பதனால் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பெண் தலைமைத்தாங்கும் மற்றும் கணவனை இழந்து பெண்களின் விடயங்கள் இங்கு கையாளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர். மேலதிக செயலாளர்கள். கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம். மற்றும் பிரதேச செயலாளர்கள் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

## வெள்ள நீரினால் அவதிப்படும் சம்பூர் மீள்குடியேற்றப் பகுதி மக்கள்



நாட்டில் நிலவுகின்ற காலநிலை மாற்றம் காரணமாக பரவலான இடங்களில் மழை பொழிந்து வருகின்றது. அண்மைக் காலமாக மீள்குடியேற்றங்கள் நடைபெற்றுவரும் சம்பூர் பகுதியில் மக்கள் குடியேறி உள்ள இடங்கள் அனைத்தும் சமதரைகள் ஆக்கப்பட்டு அங்கே குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் அப்பகுதிகளில் போதிய வடிகான்கள் இல்லாத காரணத்தினால் மழை நீர் தேங்கி பரவ லான பகுதிகளில் தற்காலிகக் கொட்டில்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் பரவலான இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. குறித்தவிடயம்தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரைஎந்தவிதமானநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஹற்றன் பகுதியில் அதிக பனிமூட்டம் காணப்படுகின்றது. அதிக பனிமூட்டம் காணப்படுகின்றதன் காரணமாக வாகனங்களை செலுத்துவதற்கு மிகவும் சிரமமாக காணப்படுகின்றது. இதனால் வாகன சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா, ஹற்றன், கினிகத்தேன, கொட்டகலை, நோர்வூட் போன்ற பிரதேசங்களில் அதிக பனிமூட்டம் காணப்படுகின்றதாக பொலிஸார் தெரிவித்தனர். ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் மற்றும் ஹற்றன் - நுவரெலியா வீதியில் அதிக பனிமூட்டம் காணப்படுகின்றமையால் குறித்த வீதியில் பயணம் செய்யும் வாகன சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதனால் வாகன சாரதிகள் வாகனங்களை செலுத்தும் போது முன் விளக்கை ஒளிரவிட்டு செல்லுமாறு பொலிஸார் மேலும் அறிவுறுத்தியுள்ளனர்.

தபால் ஊழியர்கள் 14 கோரிக்கைகளை முன்வைத்து சுகயீன விடுமுறை என்ற அடிப்படையில் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் பிரதான தபால் நிலையங்கள மற்றும் உப தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. இதனால் விநியோகிக்கப்படவிருந்த தபால்கள் நிலையங்களில் தேங்கி கிடப்பதாக தெரியவந்தது.

இதன் காரணமாக பொது மக்கள் தங்களுடைய கடிதங்களை பெற்றுக்கொள்வதிலும் அவசர விடயங்களில் ஈடுப்படுவதிலும் முடியாமல் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக பொது மக்கள் தெரிவித்தனர். இதேவேளை 14 கோரிக்கைகளையும் நிறைவேற்றாவிட்டால் தொடர்ச்சியாக சுகயீன விடுமுறை என்ற அடிப்படையில் பணி பகிஷ்கரிப்பு தொடரும் என தபால் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சுங்க அதிகாரிகள் மூவருக்கும் தொடர்ந்தும் விளக்கமறியலை நீடிக்க கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வர்த்தகர் ஒருவரிடமிருந்து 125 மில்லியன் ரூபா லஞ்சப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முயன்ற குற்றச்சாட்டின் பேரில் சுங்கத்திணைக்களத்தின் மூன்று அதிகாரிகள் சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி சட்டத்தரணிகள் குழுவொன்று கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது. குறித்த மனு மீதான விசாரணை நடைபெற்றது.

இன்போது லஞ்ச விவகாரம் தொடர்பான விசாரணைகள் இன்னும் பூர்த்தியடையாத நிலையில். சுங்கத்திணைக்கள அதிகாரிகளை பிணையில் விடுதலை செய்வது விசாரணைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதனை கவனத்திற்கொண்ட பிரதான மாஜிஸ்திரேட் நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய. குறித்த சுங்கத்திணைக்கள அதிகாரிகள் மூவரையும் எதிர்வரும் 25ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப் பூங்கா



ஒவ்வொரு விடியலிலும்
உன்னை எதிர்பார்த்தே
எழுகிறேன்
தென்றலாய்
மலராய்
பனித்துளியாய்
குயிலோசையாய்
காலை மழையாய்
அத்தனை முகத்திலும்
வருகிறாய்
உண்மை முகம் மட்டும்
மீண்டும் காட்டாமல்...!

---

உச்சத்தை பேசிவிட
எத்தனிக்கையில்
மிச்சமின்றி கரைந்து
போனது
கடைசியாக இருந்த
காசு...
அலைபேசிமட்டுமே
அறிந்த என் காதல்
உன் செவி தீண்டாமல்
அப்படியே இருக்கட்டும்...

---

இன்னும் மீதமுள்ளது
வாழ்வு
பரிமாற தயாராக
பல அன்புகள்
புரிதல் கொண்ட
உள்ளங்கள்
பரிவு காட்டும்
இதயங்கள்
வாழ்ந்துதான் பார்ப்போமே
ஒவ்வொரு நாளும்
இன்னாள் போல்
ஒளியேற்றி...

---

என்ன மாயம் செய்தாயடா
பைங்கிளியே
தலை சாய்த்து
உடல் சாய்ந்து
உருக்குலைத்து விடுகிறாய்
என்னை... உன் பார்வையால் !
கள்ளங்கபடமற்ற
உன் சிரிப்பு – என்
உள்ளம்தனை
வானோக்கி
துள்ளிக்குதிக்கச் செய்கிறது !
விரல்களை மடக்கி
என்ன வித்தை செய்கிறாயடி
இப்படி உன்னை
கண்ணிமைக்காமல்
இரசிக்க வைக்குமளவு !
பிஞ்சு கால்கள் கொண்டு
ஒரு முறையேனும் – என்
நெஞ்சம்தனில் மிதித்துவிடு
பிறவிப்பெருங்கடன்
மீதம் வேறில்லையெனக்கு...!

---

ஒரு முறை நீ
எனைக் காண வேண்டும்
என் விழிகளால்
நானுன்
முகம் மேய வேண்டும்
கண்களின் ஏக்கங்கள்
கன்னங்களில்
வழிந்தோட வேண்டும்
காற்றின் தடம்
இருவருக்குமிடையில்
இல்லாதிருத்தல் வேண்டும்
இதழ்களின் இதங்கள்
நமதாக வேண்டும்
குரல் நான் அடைத்தினும்
பிசிறில்லாமல்
பேசிட வேண்டும்
தேக்கி வைத்த வலிகள்
தீரும் நதியாகி
நீர்த்துப்போக வேண்டும்
நீயும் நானும்
வேறில்லையென்று
நாமாக வேண்டும்
இறுதிவரை நமக்காய்
நாம் வாழவேண்டும்...!

---

உனக்கும் எனக்குமான
உள்ளக்களிப்பின்
தேன் சுவடுகள்
இலைச் சருகுகளாய்
இன்னும் அங்கேயே
திரிகின்றன !
நம் நினைவுகளின் தூறல்கள்
மழைத்துளிகளின் ஈரமாய்
இன்னும் அங்கேயே
படர்ந்திருக்கின்றன !
பசுமையின் நிறங்கள்
தூரத்தில் தெரியும்
மர இலைகள்போல
தள்ளிப்போய்விட்டன !
நாம் விட்டுப்போன
நிழற்குடையின் தனிமை
நம் பிரிவுக்கு சாட்சியாய்
இன்னும் அங்கு
தனிமையிலேயே !
அதன் நிறம் போலவே
அமைந்து விட்டது
என் வாழ்வு மட்டும்...!

---

வலி தாங்கிடும்
வழியறியாததால்
வலி கிடைத்தும்
மூச்சடைக்கிறது
சில நேரங்களில் !
என்னிலிருந்து
என்னையே எடுத்து
எனக்காய்
ஆறுதலாகிறேன்
அப்போதெல்லாம்...!

## சிரிப்பு

பணக்காரர்களின் இரைச்சலில்
ஏழ்மையின் செழிப்பினில்
ஏழையின் சிரிப்பு தொலைந்தே போகிறது!
இடுப்பிலிருக்கும் ஏழைக் குழந்தை
குலுங்கி குலுங்கி சிரிக்கிறது
காரிலுள்ள குழந்தையின்
கிளுகிளுகுப்பை பார்த்தபடியே!
ஆம் குழந்தைகளின் உதடுகள்
சிரிப்பின் சர்வதேச மொழி!
அங்கே குழந்தைகள் மட்டுமே
குலத்திற்கு இடமில்லையென்பதால்!
குழந்தையின் உதடுகளின் வழியே
சிரிப்பு ரோஜா மலர்கிறது
இதழ்கள் விரிந்தபடியே!
நாமும் சேர்ந்து சிரிக்கிறோம்
ஆனால்
நாம் சிரிக்கும் முன்பே
நம் அறிவு சிரித்துவிடுகிறது!
ஏனைய உயிரினங்களால் முடியாத
இயற்கை அளித்த
இலவச நன்கொடை
இந்த அதிசய சிரிப்பு!
சிரிப்புகளுக்கும் பெயருண்டு
இளமை சிரிப்பு முதுமை சிரிப்பு
நமட்டு சிரிப்பு நயவஞ்சக சிரிப்பு
நாடக சிரிப்பு நட்பின் சிரிப்பு
அழகின் சிரிப்பு அன்பின் சிரிப்பு
எப்படியோ சிரித்தாலுண்டு
என்றும் நமக்கு சிறப்பு!
சிரிப்பிற்கும் கணக்குண்டு
அன்பினால் சிரிக்கிறான் அது பெருக்கல்
அரசாங்கம் சிரிக்கிறது அது வகுத்தல்
பிறப்பால் சிரிக்கிறான் அது கூட்டல்
இறப்பால் சிரிக்கிறான் அது கழித்தல்!
பணக்காரன் சிரிக்கிறான்
பாதசாரியின் அழுகையில்!
முதலாளி சிரிக்கிறான்
தொழிலாளியின் அழுகையில்!
உதடுகள் வழியாக வெளியேறுகிறது
வறுமையின் நோய்
ஏழைகள் சிரிக்கையில்!
புகையிலை விரிச்சாபோச்சி
பொண்ணு சிரிச்சாபோச்சி
பின்னாளில் அது
பெண்ணடிமையும் ஆச்சி!
ஆணாதிக்க சந்தையில்
சிரிப்பு மௌனமாகிவிடுகிறது
கூட்டுப் புழுக்களாய் பெண்கள்!
சிரி... சிரி...சிரித்துவிடு
சிரிப்பு வெளியேற்றுகிறது
நோய்களை
கண்ணீர்துளிகளாய்!
சிரிப்பு என்றுமே அழைப்பு
விடுப்பதில்லை
அங்கிகாரம் செய்வதற்கு!
சிரிக்க தெரியாதவன்
செத்த பிணமே
எங்கே சிரியுங்கள்
ஒருமுறை...

---

உன்னுடனான
பசுமையான நினைவுகளை
பதியம் வைத்து
காத்திருக்கிறேன்
என் ஆயுள் முழுக்க
செழித்து வளர...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கமலுக்கு பிறகு சூர்யாவைத்தான் - கௌதம் மேனன்



கௌதம் மேனன்-சூர்யாவிற்கு இடையே சில வருடங்களாக பனிப்போர் நடந்து வந்தது. இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் கௌதம் எங்களுக்கு இருந்த பிரச்சினை பேசி தீர்க்கப்பட்டு விட்டது. விரைவில் அவருடன் இணைந்து பணியாற்றுவேன். மேலும் தமிழ் சினிமாவில் கமலுக்கு பிறகு மிகவும் காட்சிகளை உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றி நடிப்பவர் சூர்யா. தன்னுடைய லுக், கதாபாத்திரத்திற்கு தகுந்தாற் போல் அவரே மாற்றிக்கொள்வார்' என கூறியுள்ளார்.

## வியாபாரமாகும் வடிவேலு வசனம்



தமிழ் சினிமாவில் யாரும் அசைக்க முடியாத கொமடியனாக வலம் வந்தவர் வடிவேலு. ஆனால் அவரின் சில தவறான முடிவால் சினிமாவில் சிலகாலம் ஒதுங்கி இருந்து தற்போது பெரியளவில் ஜொலிக்க முடியாமல் இருக்கிறார். ஆனால் இன்றும் இவரின் கொமடி தான் சின்னத்திரையை ஆக்கிரமித்து வருகின்றன. மேலும் இவரின் நானும் ரவுடி தான், த்ரிஷா இல்லனா நயன்தாரா, வருத்தப்படாத வாலிபர் சங்கம் போன்ற பிர பலமான வசனங்களை தலைப்பாக வைத்து வெளிவரும் திரைப்படங்கள் பட்டைய கிளப்புகின்றன.

தொடர்ந்து ஜில் ஜங் ஜக், சண்டைனா சட்டை கிழியத்தானே செய்யும் போன்ற வசனமும் படங்களாக தயாராகி வருகின்றன. ஆனால் இந்த வசனங்களுக்கு சிலர் மட்டுமே அனு மதி வாங்கி விற்பனை செய்கிறார்களாம். மற்றவர்கள் அனுமதியின்றித்தான் வசனத்தை தலைப்பாக வைக்கின்றனர் என்று வருத்தம் தெரிவித்துள்ளார் வைகைப்புயல்.

## ஜோதிகாவிற்கு கிடைத்த நிஜ கௌரவம்



எட்டு வருடங்கள் கழித்து 36 வயதினிலே படம் மூலம் தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியவர் ஜோதிகா. அந்தப் படத்தில் வீட்டு மாடிகளில் தோட்டம் வளர்ப்பது பற்றி முக்கியமாக கூறியிருப்பார்கள்.

தற்போது படத்தில் இடம்பெற்றதை போலவே நிஜத்தில் நடைமுறைக்கு வர இருக்கிறது. அதாவது சென்னையில் உள்ள ஒரு லட்சம் வீடுகளில் மாடித்தோட்டம் அமைக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தத் தகவல் 36 வயதினிலே படக்குழுவினரை மிகவும் பெருமைப்படுத்தியுள்ளது.

## பாகுபலி இயக்குனரை கவர்ந்த தமிழ் படம்



பிரபல தெலுங்கு இயக்குனர் ராஜமௌலி, 'பாகுபலி' என்ற வரலாற்று படத்தின் மூலம் புகழின் உச்சிக்கே சென்றுவிட்டார். இவர் எப்போதும் வளர்ந்து வரும் இளம் இயக்குனர்களை ஊக்குவிக்க தவறுவதில்லை. (அது மற்ற மொழி படங்களாக இருந்தாலும் கூட).

அந்த வகையில் சில மாதங்களுக்கு முன்பு வெளியான 'தனி ஒருவன்' படத்தை சமீபத்தில் பார்த்த அவர், அந்தப் படம் பற்றி தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் புகழ்ந்து தள்ளியுள்ளார். மோகன் ராஜாவின் உழைப்பை பாராட்டிய அவர், அரவிந்த் சாமியின் நடிப்பு தன்னை வெகுவாக கவர்ந்துவிட்டதாக கூறியுள்ளார்.

## நந்திதாவை ஏமாற்றிய ரஞ்சித்



எல்லா கதாநாயகிகளுக்கும் ரஜனியுடன் நடித்து விடவேண்டும் என்பது ஒரு ஆசையாக அல்லது கனவாக இருக்கும். அதுபோல நந்திதாக்கும் இது ஒரு பெரிய கனவாக இருந்தது. இந்நிலையில் ரஞ்சித் ரஜனியை வைத்து கபாலி படத்தை இயக்குவதாக தகவல் கிடைத்துள்ளது நந்திதாவிற்கு. இதனால் ரஞ்சித்தை அனுகி அவருடன் நடிக்க வாய்ப்பு கேட்டுள்ளார். அதற்கு இப்போது தான் கதை பேச்சுவார்த்தை நடக்கிறது. ஆர்ட்டிஸ்ட் செலக்ஷன் நடக்கும் போது அழைக்கிறேன் எனக்கூறியுள்ளார் ரஞ்சித். ஆனால் ரஞ்சித் நந்திதாவை மறந்தே விட்டாராம். இதனால் ஏமாற்றமடைந்த நந்திதா இன்னொரு வாய்ப்பு கண்டிப்பாக கிடைக்கும் என்று தனது மனதிற்கு ஆறுதல் சொல்லிக்கொள்கிறாராம்.

## தனுஷிற்கு எதிராக கிளம்பிய பிரச்சினை

தனியார் டிடீஎச் நிறுவன விளம்பரத்தில் கேபிள் டிவி ஒபரேட்டர்களை கேவலமாக சித்தரிப்பதாகக்கூறி நடிகர் தனுஷிற்கு எதிராக தமிழக கேபிள் டிவி ஒபரேட்டர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இது தொடர்பாக தமிழக கேபிள் டிவி ஒபரேட்டர்கள் பொதுநல சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஜி.தாமோதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பிரபல திரைப்பட நடிகர் தனுஷ், தனியார் டிடீஎச் நிறுவன விளம்பரத்தில் கேபிள் டிவி ஒபரேட்டர்களை கொச்சைப்படுத்தி கேவலமாக சித்தரிக்கும் நடவடிக்கையை கடுமையாக கண்டிக்கிறோம். இந்த விளம்பர காட்சிகளை உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

கேபிள் டிவி ஒபரேட்டர்களை கொச்சைப்படுத்தி சித்தரிக்கும் நடவடிக்கையை ஏற்கமுடியாது. இந்த காட்சியை ரத்துசெய்து தமிழகம் முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான கேபிள் டிவி ஒபரேட்டர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். தவறும் பட்சத்தில் பல்லாயிரக்கணக்கான கேபிள் டிவி ஒபரேட்டர்கள் அவருக்கு எதிராக போராட்டம் நடத்த நேரிடும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம் என்றுள்ளனர்.

## பொங்கல் ரிலீஸில் களமிறங்கும் படங்கள்



ஒரு வழியாக தீபாவளி ரிலீஸ் முடிந்து விட்டது. வேதாளம், தூங்காவனம் இரண்டு பெரிய படங்களும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அடுத்ததாக அனைவரும் எதிர்பார்க்கும் பெரிய பண்டிகை ரிலீஸ் பொங்கல் தான்.

இதில் பாலா இயக்கியுள்ள தாரை தப்பட்டை, சுந்தர்.சி இயக்கியுள்ள அரண்மனை 2, சூர்யாவின் 24, விஷா லின் கதகளி ஆகிய படங்கள் பொங்கல் ரேசில் களமிறங்க உள்ளன. மேலும் இந்த மாதம் சத்யராஜின் ஒருநாள் இரவில், பாண்டியராஜின் பசங்க 2, அனுஷ்காவின் இஞ்சி இடுப்பழகி, அட்டக்கத்தி தினேஷின் ஒருநாள் கூத்து படங்களும் வெளிவரவுள்ளன.

## மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிய நடிகர்



சில நாட்களுக்கு முன் சினிமா ரசிகர்களின் மனதை கஷ்டப்படுத்திய தகவல் விவேக்கின் மகன் பிரசன்னா மரணம். இந்த செய்தி அனைவரின் மனதையுமே வருத்தத்தில் ஆழ்த்தி இருந்தது.

விவேக் இந்த நிலையில் இருந்து விரைவில் மீண்டு வரவேண்டும் என்று வேண்டியவர்கள் பலர். இந்த நிலையில் விவேக் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் ரசிகர்களுக்கு மகிழ்ச்சி தகவலை கூறியுள்ளார்.

## தமன்னாவின் இந்த ஆசை நிறைவேறுமா?



நடிகை தமன்னாவிற்கு இந்த வருடம் வெற்றிகரமான வருடமாக மாறிவிட்டது. பாகுபலி படம் பிரமாண்ட வெற்றி பெற்றதால் இந்த வருடம் எனக்கு 'பாகு பலி தீபாவளி' என கூறியுள்ள அவர், தனது குடும்பத்துடன் விழாவை கொண்டாடி வருகிறார். மேலும் அவருடைய நீண்ட நாள் கனவு பற்றியும் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

பொலிவுட் நடிகர் ஹ்ரித்திக் ரோஷ னோடு நடிக்க வேண்டும் என்பதுவே அது. தற்போது பாகுபலி-2, தோழா போன்ற படங்களில் நடித்து வரும் அவர் விரைவில் ஹிந்தி சினிமாவில் நுழை வார் என எதிர்பார்க்கலாம். சமீபத்தில் ஷாருக்கானோடு அவர் நடித்த ஒரு விளம்பர படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் சிவகார்த்திகேயன்



வேதாளம் படத்துக்கு பிறகு தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் இளம் இயக்குனர்களை வைத்து 2 படங்களை தயாரிக்க உள்ளார். அந்த லிஸ்டில் முதலில் இருப்பவர் விக்னேஷ் சிவன். இவரின் நானும் ரவுடி தான் படம் பெருவாரியான மக்களை கவர்ந்துள்ளதால் படம் வசூல் வேட்டை செய்தது.

இதன் அடிப்படையிலே விக்னேஷ் சிவனுக்கு வாய்ப்பு கொடுத்துள்ளார் ரத்னம். மேலும் இவர்கள் இணையும் படத்துக்கு சிவகார்த்திகேயனை கதா நாயகனாக தேர்வு செய்துள்ளனர். ஆனால் இன்னும் சிவாவிடம் இருந்து உறுதியான பதில் கிடைக்கவில்லை என்று தயாரிப்பு நிறுவனம் சார்பில் தெரிவித்துள்ளனர்.

## தனி ஒருவனை தொடர்ந்து ஜெயம் ரவிக்கு குவியும் வாய்ப்பு



தனி ஒருவன் படத்தின் வெற்றியை தொடர்ந்து ஜெயம் ரவிக்கு அதிக வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளது. தற்போது அனைத்து இயக்குனரின் கண்களும் ஜெயம் ரவி பக்கம் தான் திரும்பியுள்ளது. சிறிது நாட்களுக்கு முன்பு தான் சுசீந்திரன் இயக்கும் படத்தில் கமிட் செய்யப்பட்டார் ஜெயம் ரவி. தற்போது கௌதம் மேனன் இயக்கும் புதிய படத்திற்கு ஜெயம் ரவி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது.

## ஜீவாவிற்கு குவியும் நாயகிகள்



யான் படத்தின் தோல்விக்கு பிறகு மிகவும் கவனமாக அடுத்தடுத்த படங்களை தேர்வு செய்து வருகிறார் ஜீவா. அந்த வகையில் அடுத்து இவர் நடிப்பில் திருநாள் படம் திரைக்கு வரவிருக்கின்றது. இப்படத்தில் இவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். இதை தொடர்ந்து போக்கிரி ராஜா என்ற படத்தில் நடிக்கின்றார்.


இப்படத்தில் இவருக்கு ஜோடியாக ஹன்சிகா நடித்து வருகிறார். சமீபத்தில் வந்த தகவலின் படி இப்படங்கள் முடிந்த கையோடு அடுத்து ஒரு புதிய படத்தில் ஜீவா நடிக்க கமிட் ஆகியுள்ளதாகவும், இதில் அவருக்கு ஜோடியாக தமன்னா நடிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.

அஜித் தன் ரசிகர்களுக்காக எந்தவித ரிஸ்க்கான காட்சிகளிலும் நடிப்பார். அந்த வகையில் வேதாளம் படத்தின் இடைவேளையில் வரும் சண்டைக்காட்சியில் டூப் இல்லாமல் பல காட்சிகளில் நடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் உலகம்

## பேஸ்புக்கிற்கு சிம்ம சொப்பனமாக மாறும் Snapchat



Snapchat எனும் சட்டிங் சேவையை வழங்கிவரும் நிறுவனமானது வெளியிட்டுள்ள தகவல் ஆனது எதிர்வரும் காலங்களில் பேஸ்புக் ஆட்டம் காணுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதாவது தமது சேவையின் ஊடாக நாள் ஒன்றிற்கு 6 பில்லியன் வீடியோக்கள் பார்வையிடப்படுவதாக தெரிவித்துள்ளது. இது மே மாத பகுதியில் காணப்பட்டதை விடவும் 2 மில்லியன்கள் அதிகமாகும்.

இதேவேளை பேஸ்புக் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட தகவலின்படி தமது சேவையின் ஊடாக நாளாந்தம் 8 பில்லியன் வீடியோக்கள் பார்வையிடப்படுவதாக தெரிவித்துள்ளது. இதன்படி பார்க்கையில் Snapchat ஆனது விரைவில் பேஸ்புக்கினை முந்திவிடும்போல் இருக்கின்றது.


## சிறந்த இரவுப் பார்வையை பெற உதவும் கிரபீன்



நைட் விஷன் எனப்படும் இரவு நேரங்களிலும் காட்சிகளை பார்வையிடக்கூடிய பல தொழில்நுட்பங்கள் தற்போது காணப்படுகின்றன. எனினும் தற்போது கிரபீன் எனப்படும் காபன் மூலக்கூறின் புறதிருப்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் வில்லைகள் (Lens) அதிக வினைத்திறன் உடைய தாகக் காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைப் பயன்படுத்தி இரவு நேரங்களில் வாகனங்களை இலகுவாக செலுத்திச்செல்ல முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கிரபீன் ஆனது மிகவும் சிறியதாகவும், பாரம் குறைந்ததாகவும், மீள்தன்மை உடைய தாகவும் காணப்படுவதுடன், வலிமை மிக்கதாகவும் காணப்படக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.


## Pinterest தரும் அட்டகாசமான வசதி



ஒன்லைனில் புகைப்படங்களை பகிரும் சேவையை வழங்கிவரும் Pinterest நிறுவனமானது தற்போது புத்தம் புதிய வசதி ஒன்றினை பயனர்களுக்கு அறிமுகம் செய்துள்ளது. அதாவது இதுவரை காலமும் தட்டச்சு மூலம் அல்லது குரல் வழி கட்டளைகள் மூலம் குறித்த ஒரு விடயம் தொடர்பாக இணையத்தேடல்கள் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

ஆனால் முதன் முறையாக Pinterest ஆனது படங்களின் ஊடாக (Visual Search) இணையத்தேடல்களை மேற்கொள்ளும் வசதியினை அறிமுகம் செய்துள்ளது. உதாரணமாக நிழற்படம் ஒன்றிலுள்ள குறித்த ஒரு பகுதியை மட்டும் தெரிவுசெய்து அதற்கு ஒப்பான ஏனைய படங்களை தேடல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## புதிய வசதிகளுடன் அறிமுகமான ஜீப்ரானிக்ஸின் ஹெட்போ.்.ன்



ஜீப்ரானிக்ஸ் நிறுவனம் மைக்குடன் கூடிய புதிய உயர் ரக ஹெட்போஃனை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இது USB மற்றும் 3.5mm ஸ்டீரியோ இன்புட்டுடன் கூடிய Electro head ஆகும். மேலும் டியூவல் இன்புட் தேர்வும் இதில் உள்ளது.

### இதிலுள்ள மற்ற அம்சங்கள்

டீப் பாஸ், USB அல்லது 3.5mm இன்புட், 50mm டிரைவர், இன் பில்ட் மைக், வசதியான மற்றும் மென்மையான பெரிய இயர் பேட்கள், வலிமையான ஸ்லீவுடன் கூடிய கேபிள், ஒலி அளவு கட்டுப்பாட்டுக் கருவி, நிறம் மாறும் LED லைட்டுகள், இந்த எலெக்ட்ரோ ஹெட், இசை, சினிமா மற்றும் விளையாட்டிற்கு ஏற்ற உயர் ரக ஹெட்போன் ஆகும். இது டியூவல் இன்புட் ஒப்ஷன்களுடன் வருகிறது. இன்புட்டிற்காக USB அல்லது 3.5mm ஸ்டீரியோ கனெக்டரைப் பயன்படுத்தலாம்.

இதன் இம்பிடன்ஸ் (மின் தடை) 32 ஓம்கள் ஆகும். இதை கணனிகள், கைப்பேசிகள், டேப்லெட்டுகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் பயன்படுத்தலாம். காதுகளை முழுமையாக மூடிக்கொள்ளும் பெரிய இயர் பேடுகளுடன் வரும் இந்த ஹெட்போன் ஒலி இரைச்சல் தடுப்பை அளிக்கும். இயர் பேடுகள் மென்மையாகவும் மிருதுவாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஜீப்ரானிக்ஸின் ஒருவருட வோரண்டியுடன் வருகிறது.

## செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியில் பாரிய முதலீடு செய்யும் டொயோட்டா




முன்னணி கார் வடிவமைப்பு நிறுவனமான டொயோட்டா ஆனது செயற்கை நுண்ணறிவு கொண்ட ரோபோக்களை வடிவமைப்பதற்கான ஆராய்ச்சிக்காக சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்கின்றது. அந்நிறுவனத்தின் ஆராய்ச்சி பகுதியான Toyota Research Institute Inc (TRI) நிறுவனமே இப்பொறுப்பினை ஏற்றுள்ளது.

இதேவேளை இத்துணை நிறுவனத்தின் தலைமையகமானது ஸ்டன்போர்ட் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் உள்ள சிலிக்கன் வலி பகுதியில் அடுத்த வருடம் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சியின் படி, பச்சை பட்டாணியில் உள்ள Coumestrol எனப்படும் Phytonutrients புற்றுநோய்க்கு எதிராக செயற்படும் ஒன்றாகும். இதனை நாள்தோறும் உணவில் சேர்த்துக்கொண்டால் வயிற்று புற்றுநோய்க்கு சிறந்த மருந்தாக அமையும்.


## கைப்பேசி வடிவமைப்பில் புரட்சியை ஏற்படுத்த வரும் Processor



ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் டேப்லட்கள் என அதிகளவான மொபைல் சாதனங்களில் Qualcomm Processorகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் Qualcomm Snapdragon 820 தொடர் Processor இனை அறிமுகம் செய்வது தொடர்பான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

அடுத்த வருடம் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த Processor ஆனது Samsung Galaxy S7 மற்றும் HTC M10 ஆகிய ஸ்மார்ட் கைப்பேசிகளில் பயன்படுத்தப்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேலும் இப்புதிய Processor தொடர்பான தகவல் ஒன்றினை அதனை உலகம் முழுவதும் சந்தைப்படுத்தலுக்கு பொறுப்பானவரான Tim McDonough என்பவர் தனது டுவிட்டர் தளத்தில் டுவீட் செய்துள்ளார்.


## பழைய இயங்குதளங்களுக்கான சேவையை நிறுத்தும் கூகுள் குரோம்



உலகிலேயே அதிகளவானவர்களால் பயன்படுத்தப்பட்டுவரும் கூகுளின் குரோம் இணைய உலாவிக்கான சேவையானது பழைய இயங்குதளங்களுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்படவுள்ளது. இதன்படி எதிர்வரும் 2016ஆம் ஆண்டு முதல் Windows XP, Vista, Mac 10.6, 10.7 மற்றும் 10.8 ஆகிய இயங்குதளங்களுக்கான சேவை நிறுத்தப்படவுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது புதிய இயங்குதளமான விண்டோஸ் 10 இனை அறிமுகம் செய்த பின்னர் அதிகளவான கணனிகள் உட்பட மொபைல் சாதனங்களில் அ[illegible] இயங்குதளம் பயன்பாட்டில் வந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இனிவரும் காலங்களில் புதிய இயங்குதளங்கள் ஊடான சேவையை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.


## புதிதாக 1000 வேலைவாய்ப்புக்களை வழங்கும் அப்பிள்



ஐரோப்பிய நாடுகளுக்கான தலைமைச் செயலகத்தை அயர்லாந்தில் கொண்டுள்ள அப்பிள் நிறுவனம் அதன் ஊடாக புதிதாக 1000 வேலைவாய்ப்புக்களை வழங்கவுள்ளது. இதனை அப்பிள் நிறுவனத்தின் தலைமை அதிகாரியான Tim Cook அயர்லாந்திற்கு விஜயம் செய்ததன் பின்னர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு 1000 வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் அயர்லாந்தில் அப்பிள் நிறுவனத்திற்காக பணிபுரிவோரின் எண்ணிக்கை 6000 ஆக அதிகரிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளை அயர்லாந்திலுள்ள Sustainable Energy Authority நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ள சக்தி வளம் தொடர்பான ஆராய்ச்சி ஒன்றில் 01 மில்லியன் யூரோக்களை முதலீடு செய்யவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யூடியூப் தரும் Virtual Reality வசதி



வீடியோக் கோப்புக்களை பகிருவதில் முன்னணி சேவையை வழங்கிவரும் யூடியூப் நிறுவனம் அண்மையில் விளம்பரங்கள் அற்ற சேவையை வழங்குவதற்கான சந்தா முறையினை அறிமுகம் செய்திருந்தது. இவ்வாறான நிலையில் தற்போது அனைத்து வீடியோக்களையும் நிஜம்போல் தோற்றமளிக்கக்கூடிய வசதியான Virtual Reality வசதியினை வழங்கியுள்ளது.

எனினும் இவ் வசதியினை அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படும் யூடியூப் அப்பிளிக்கேஷனுக்கு மட்டுமே தற்போது வழங்கியுள்ளது. தவிர இதற்கு Google Cardboard Viewer எனும் துணைச் சாதனத்தினையும் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். இத் துணைச் சாதனத்தை 15 டொலர்கள் பெறுமதியில் கொள்வனவு செய்ய முடியும்.

## ஏழைகளின் அப்பிள் "நெல்லிக்காயின்" மருத்துவ பலன்கள்



இயற்கையின் கொடையான நெல்லிக்காயில் வேறெந்த கனிகளிலும் இல்லாத அளவுக்கு அதிக சத்துக்கள் நிறைந்துள்ளது. தினமும் அப்பிள் சாப்பிட்டால் மருத்துவரிடம் செல்ல வேண்டியதில்லை என்பது பழமொழி. மூன்று நெல்லிக்காயில் ஒரு அப்பிளுக்கு இணையான சத்துக்கள் உள்ளது. எனவே ஏழைகளின் அப்பிள் என அழைக்கப்படுகிறது. நெல்லிக்காயில் விட்டமின் சி அளவுக்கு அதிகமாக நிறைந்துள்ளது. நெல்லிக்காயில் மலை நெல்லிக்காய் என்ற ஒன்றும் உள்ளது. இது தான் உடலுக்கு மிகவும் சிறந்தது.

நெல்லிக்காயால் செய்யப்படும் ஜூஸானது சற்று துவர்ப்புடன் இருக்கும். துவர்ப்புடன் உள்ளது என்பதற்காக அதனை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டாம். ஏனெனில் அதனை தினமும் உடலில் சேர்த்துவந்தால், அந்த நெல்லிக்காயின் உண்மையான பலனை நிச்சயம் உணர முடியும். தலைமுடி கருத்து நீண்டு வளர உதவுகிறது. இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது. கல்லீரல் வேலைசெய்ய உதவுகிறது. ஞாபக சக்தியை அதிகரிக்கப்பயன்படுகிறது. இரத்தத்தில் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறது. நகம், பல் ஆகியவற்றை பலப்படுத்துகிறது. முகச்சுருக்கத்தைக் குறைத்து இளமைத்தோற்றத்தைத் தருகிறது. இன்சுலின் சுரப்பை அதிகரித்து இரத்தத்தில் குளுக்கோஸின் அளவைக் குறைக்கிறது. இதன் மூலம் நீரிழிவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார் யூனிஸ்கான்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களில் ஒருவரான யூனிஸ்கான் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவித்துள்ளார். அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணப்போட்டியில் சரியாக விளையாடாததால் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட யூனிஸ்கான், பின்னர் அணியில் இருந்து நீக்கப்பட்டார். இந்த நிலையில் சுமார் 6 மாதங்களுக்கு பிறகு இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் சேர்க்கப்பட்டார்.

இதனால் தெரிவுக்குழு மீது கடும் விமர்சனம் எழுந்தது. இதனால் இங்கிலாந்து தொடரின் மத்தியில் அவர் ஓய்வு அறிவிப்பார் என்று கூறப்பட்டது. இந்த தொடரில் பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி தொடங்கியது. இந்நிலையில் இந்த முதல் போட்டியுடன் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கடந்த 2000ம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானார் யூனிஸ்கான். தற்போது 37வயதாகும் அவர் 265 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7 சதம். 48 அரைசதம் உட்பட 7240 ஓட்டங்களை குவித்துள்ளார்.

## இந்தியா வருகிறார் பிரேசில் கால்பந்து ஜாம்பவான் ரொனால்டோ



பிரேசில் கால்பந்து அணியின் ஜாம்பவான் ரொனால்டோ இந்தியா வர விரும்பம் தெரிவித்துள்ளார். உலகின் சிறந்த வீரர்களில் ஒருவரான ரொனால்டோ உலகக்கிண்ணம் வென்ற பிரேசில் அணியில் இரண்டுமுறை இடம்பெற்றவர். இவர் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டியை காண இந்தியா வரவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய ரொனால்டோ, "நான் இந்தியாவிற்கு சென்று அங்கு நடக்கும் இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டியை காணவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இப்போது பிரேசிலில் நடைபெறும் போட்டி ஒன்றில் கலந்துகொள்ள செல்வதால் இம்முறை தவறவிட்டுவிட்டேன். அதனால் இந்த முறை என்னால் இந்தப் போட்டியை காணவர முடியவில்லை. இருப்பினும் கண்டிப்பாக அடுத்த ஆண்டு நடக்கும் 3வது இந்தியன் சூப்பர் லீக் போட்டியை காண நான் இந்தியாவிற்கு வருவேன்" என்று தெரிவித்துள்ளார்.

## கால்பந்து விளையாடி காலை உடைத்துக்கொண்ட பிளாண்டர்



தென் ஆபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிளாண்டர் காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து விலகியுள்ளார். இந்தியா-தென் ஆபிரிக்க அணிகள் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. மொகாலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இந்நிலையில் 2வது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14ம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது. இதற்காக தென் ஆபிரிக்க அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டுள்ளது. இந்த நிலையில் பயிற்சியின் ஒரு பகுதியாக தென் ஆபிரிக்க வீரர்கள் கால்பந்து விளையாடினர். அப்போது தென் ஆபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் வெர்னன் பிளாண்டருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஊழியர்கள் அவரை டிரெஸிங் ரூம்மிற்கு அழைத்து சென்றனர். அவருக்கு ஸ்கேன் செய்து பார்த்ததில் காயம் பெரிய அளவில் இருப்பதால் அவருக்கு 8 வாரங்கள் ஓய்வு தேவை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அவர் இந்தியாவுக்கு எதிரான மீதமுள்ள டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். காயத்தால் ஸ்டெய்ன் ஏற்கனவே அவதிப்பட்டுவரும் நிலையில் பிளாண்டருக்கும் காயம் ஏற்பட்டிருப்பது அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது. மொகாலி டெஸ்ட் போட்டியில் 27 ஓவர்களை வீசிய பிளாண்டர் 3 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். பிளாண்டருக்குப் பதிலாக கைல் அபாட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## வெற்றி பெற எதையும் செய்வேன் – டிவில்லியர்ஸ்



நான் ஆடுகளத்தில் நல்ல மனிதராக இருக்க மாட்டேன் என்று தென் ஆபிரிக்க அணியின் அதிரடி வீரரான டிவில்லியர்ஸ் கூறியுள்ளார். தென் ஆபிரிக்க அணியின் ஒருநாள் போட்டி தலைவரான டிவில்லியர்ஸ் மைதானத்தில் ஒரு இடம் விடாமல் பந்தை அனைத்து பக்கமும் விளாசிபட்டையை கிளப்புவார். இதனாலே அவரை ரசிகர்கள் "மிஸ்டர்-360" என்று அழைப்பர். அதேசமயம் வீரர்கள் அவரை சீண்டினாலும் சரி. பந்தை எறிந்து காயப்படுத்த முயற்சி செய்தாலும் சரி சிரித்து கொண்டே அதிரடி காட்டுவார். இந்த நிலையில் பெங்களூரில் நடக்கும் 2வது டெஸ்ட் போட்டியில் களமிறங்கும் டிவில்லியர்ஸ் தனது 100வது டெஸ்ட் போட்டியை விளையாட உள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில். "100வது போட்டியில் களமிறங்கப்போகிறேன் என்பதை விட இந்தியா எங்களை விட முன்னிலையில் இருக்கிறது என்பதே எனக்கு அதிக நெருக்கடியை கொடுக்கிறது. பெங்களூரில் போட்டியில் வெற்றிப்பெற்று தொடரை எங்கள் பக்கம் கொண்டுவர வேண்டும். நான் ஆடுகளத்தில் ரொம்ப கெட்டவன். எங்கள் அணி வெற்றிபெற என்ன வேண்டுமானாலும் செய்வேன். எதிரணி வீரர்கள் ஸ்லெட்ஜிங் செய்தால் நானும் ஸ்லெட்ஜிங் செய்வேன். நான் செய்ய நினைத்தால் அதை செய்து முடிப்பேன். மேலும், விராட் கோஹ்லியின் தொழிநுட்பம் மற்றும் அவரது சிறிய தவறுகள் பற்றி கூறி அவரது ஆட்டத்தை திசைதிருப்ப முயற்சி செய்வேன். அது எங்களுக்கு வெற்றியை தேடித்தரும். நான் [illegible] மாட்டேன்" என்று [illegible].

## அரசின் அனுமதியுடன் ஊக்கமருந்து – ரஷ்யாவுக்குத் தடை



ஊக்கமருந்துபயன்படுத்திய விவகாரத்தில் ஒலிம்பிக் உட்பட பல சர்வதேச போட்டிகளில் பங்கேற்க ரஷ்யாவுக்கு தடை விதிக்கப்படும் என்று தெரிகிறது. கடந்த 2001 முதல் 2012ம் ஆண்டு வரை நடந்த ஒலிம்பிக், உலக சாம்பியன்ஷிப் உட்பட பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற 12 ஆயிரம் வீரர், வீராங்கனைகளிடம் நடத்தப்பட்ட ஊக்க மருந்து சோதனை முடிவு கடந்த மாதம் வெளியாகியது. இதில் ரஷ்ய விளையாட்டு நட்சத்திரங்கள் அந்த நாட்டு அரசின் அனுமதியுடன் ஊக்க மருந்து எடுத்துக்கொண்டது நிரூபணம் ஆகியுள்ளது. மேலும், கடந்த 11 ஆண்டுகளில் ரஷ்யாவுக்கு பதக்கம் வென்று கொடுத்த 80 சதவீத பேர் சந்தேகத்துக்கு உரியவர்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச ஊக்க மருந்து சோதனை மையத்தின் (டபுள்யு.ஏ.டி.ஏ) தலைவர் ரிச்சர் பவுண்ட் கூறுகையில், "இது மிகவும் பயங்கரமாக உள்ளது. அரசின் அனுமதி இல்லாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை. உடனடியாக சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். இதற்கிடையில் ரஷ்யா மீது வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்த வார இறுதிக்குள் அவர்கள் பதிலளிக்க வேண்டும் என சர்வதேச தடகள சம்மேளனத்தின் தலைவர் சபாஸ்டியன் கோ கோரியுள்ளார்.

## மல்யுத்த வீரருக்கு பளார் விட்ட வெய்ன் ரூனி



இங்கிலாந்தில் நடந்த மல்யுத்த போட்டியில் மான்செஸ்டர் கால்பந்து அணித்தலைவர் வெய்ன் ரூனி, தன்னை வம்பிழுத்த மல்யுத்த வீரர் வேட் பாரெட்டை தாக்கியுள்ளார். மல்யுத்த ரா போட்டி இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் நடந்தது. இதில் இங்கிலாந்து கால்பந்து அணியின் முன்னாள் தலைவரும், மான்செஸ்டர் யுனிடெட் கிளப் அணியின் தலைவருமான வெய்ன் ரூனி தனது மகனுடன் கலந்து கொண்டார். அப்போது மல்யுத்த வீரர் வேட் பாரெட் ரூனியை தொடர்ந்து சீண்டிய வண்ணம் இருந்தார். மேலும், அவரை சண்டையிடும் படி அழைத்தார்.

அவர் கூறுகையில், "நீ என்னுடன் சண்டையிட்டு தோற்றுப்போவதை உன் மகன் பார்ப்பதை நான் விரும்பவில்லை. இருப்பினும் நீ கால்பந்து களத்தில் இறங்கி தோற்றுப்போவதை பார்க்க உனது மகனுக்கு அனுபவம் வேண்டுமே. அதனால் என்னுடன் சண்டைக்கு வா.." என்று கூறினார். இந்நிலையில் கீழே இறங்கி ரூனியை தொடர்ந்து வேட் திட்டிக் கொண்டிருந்த நிலையில், ரூனி வேட் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இதனால் அவர் தரையில் விழுந்தார். இதை சாதமாக பயன்படுத்தி அவரது அணியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த வீரர் தோற்றடிக்கப்பட்டார். நடைபெற்று வரும் பிரிமியர் லீக் சீசனில் 11 போட்டிகளில் விளையாடியுள்ள ரூனி 2 கோல்கள் மட்டுமே அடித்துள்ளார்.

## டில்ஷானை வீழ்த்தியதை வித்தியாசமாக கொண்டாடும் பொல்லார்ட்



இலங்கை அணியின் அதிரடி தொடக்க வீரரான டில்ஷானை வீழ்த்தியதை மேற்கிந்திய தீவுகள் அணியின் பொல்லார்ட் வித்தியாசமாக கொண்டினார். இலங்கை-மேற்கிந்திய தீவுகள் அணிகள் 2 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் மோதியது. இதன் முதல் டி20 போட்டியில் டில்ஷான் 56 ஓட்டங்கள் எடுத்து இலங்கை அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். இவரது விக்கெட்டை பொல்லார்ட் தான் எடுத்தார்.

பவுண்டரிகளாக விளாசிக் கொண்டிருந்த டில்ஷானுக்கு யார்க்கராக ஒரு பந்து வீசினார் பொல்லார்ட். அதை வித்தியாசமாக ஆட முற்படும் போது டில்ஷான் பவுல்ட் ஆனார். டில்ஷானின் இந்த விக்கெட்டை வெற்றிலை போடுவதுபோன்று கை செய்கையால் செய்து காண்பித்து கொண்டாடினார் பொல்லார்ட். நடந்த 2வது டி20 போட்டியிலும் டில்ஷான் (52) அரைச்தம் விளாசினார். ஆனால் மேற்கிந்திய தீவுகள் அணி அந்தப் போட்டியில் 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றுதொடரை 1-1 என்றுசமன் செய்தது. இரண்டு டி20 போட்டிகளிலும் அரைசதம் அடித்த டில்ஷான் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

## யுவராஜ் சிங்கிற்கு இங்கிலாந்து நடிகையுடன் ரகசிய நிச்சயதார்த்தம்



இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கிற்கு இங்கிலாந்து நடிகையும் மொடல் அழகியுமான ஹேசல் கேச்சுடன் ரகசிய திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்தில் இந்திய வீரர் ஹர்பஜன் சிங் தனது நீண்ட நாள் தோழியான கீதா பாஸ்ராவை திருமணம் செய்து கொண்டார். இவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் யுவராஜ் சிங்குடன் கிசுகிசுக்கப்பட்ட இங்கிலாந்து நடிகை ஹேசல் கேச்சும் கலந்துகொண்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில் யுவராஜ், இங்கிலாந்து நடிகை ஹேசல் கேச்சை காதலிப்பதாகவும், இவர்கள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் ஊடகங்களில் செய்தி வெளிவந்தது. ஆனால் ஊடகங்களின் வெளியான இந்த செய்திக்கு யுவராஜ் மறுப்பு தெரிவித்திருந்தார். தற்போது யுவராஜ் சிங்கிற்கும் ஹேசல் கேச்சுக்கும் இந்தோனேசியாவில் உள்ள பாலி என்ற இடத்தில் ரகசிய நிச்சயதார்த்தம் நடந்துவிட்டதாக கூறப்படுகிறது. அதிரடி ஆட்டக்காரரான யுவராஜ் சிங் கடந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்தோடு இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## பேச்சுவார்த்தைக்கு இராணுவத் தலைவர்களுக்கு அழைப்பு - சூகி



மியான்மரில் தேசிய நல்லிணக்க பேச்சுவார்த்தைக்கு வருமாறு இராணுவ தலைவர்களுக்கு ஆங் சாங் சூகி அழைப்பு விடுத்துள்ளார். மியான்மரில் கடந்த 1962ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பு 1990இல் நடைபெற்ற தேர்தலில் என்எல்டி வெற்றிபெற்றது. ஆனால் தேர்தல் முடிவை இராணுவம் ஏற்க மறுத்துவிட்டது. எனினும், சர்வதேச நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக கடந்த 2010இல் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. இதில், இராணுவ ஆதரவு பெற்ற கட்சியான யுஎஸ்டிபி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இந்நிலையில், மியன்மாரில் 25 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 8ஆம் திகதி பாராளுமன்ற பொதுத்தேர்ல் நடைபெற்றது. இதில் ஆங் சாங் சூகியின் என்எல்டி கட்சி 75 சதவீத இடங்களில் முன்னிலை பெற்று ஆட்சியை பிடிக்கவுள்ளது. ஆளும் கட்சியான ஐக்கிய சகோதரத்துவ மேம்பாட்டுக்கட்சி (யுஎஸ்டிபி) தோல்வியை சந்தித்துள்ளது.

இந்நிலையில் தேசிய நல்லிணக்க பேச்சுக்கு வருமாறு இராணுவ தலைவர்களுக்கு ஆங் சாங் சூகி அழைப்பு விடுத்துள்ளார். இதற்கு பதிலளித்து பேசிய அதிபர் தரப்பு பேச்சாளர், தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியான பின்னரே பேச்சுவார்த்தை நடக்கும் என்றும், சூகியின் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றதற்காக தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.


## முதலாம் உலகப் போரில் உயிர் நீத்த இராணுவத்தினருக்கு அஞ்சலி



முதலாம் உலகப் போரினால் வீர மரணம் அடைந்தவர்களை நினைவுகூறும் வகையில் பிரித்தானியாவில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவஞ்சலி நாளினை முன்னிட்டு பிரித்தானியா முழுவதும் பொதுமக்களால் 2 நிமிடம் மௌன அஞ்சலி கடைபிடிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்கேற்கும் பொருட்டு முன்னாள் இராணுவ வீரர்கள் பலர் லண்டனில் உள்ள Cenotaph பகுதியில் குவிந்துள்ளனர்.

இந்த நிகழ்வினை முன்னிட்டு நடைபெறும் சடங்கில் Cenotaph பகுதியில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியுள்ளனர். முதலாம் உலகப் போர் முடிக்கு வந்த நவம்பர் 11ஆம் திகதியை நினைவுகூறும் வகையில் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளில் இந்த மௌன அஞ்சலி கடைபிடிக்கப்படுகிறது. உயிர் நீத்த வீரர்களுக்கான நூற்றாண்டு நினைவிடத்தில் பொப்பி மலர்களையே சமர்ப்பித்து பிரித்தானியர்கள் அஞ்சலி செலுத்துவது வழக்கம். இந்த நிகழ்வில் பிரித்தானிய பிரதமர் கெமரூன், இளவரசர் சார்ள்ஸ் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர். பிரித்தானியாவில் கடந்த 1995ஆம் ஆண்டு முதல் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதை கட்டாயமாக்கியுள்ளனர். முதலாம் உலகப்போரில் 6 கோடி ஐரோப்பியர்கள் உள்ளிட்ட 7 கோடி இராணுவ வீரர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்தப்போரில் சாதாரண மக்கள், இராணுவ வீரர்கள் என சுமார் 2 கோடி பேர் உயிரிழந்து, 2 கோடிக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## 200 சிறுவர்களை சுட்டுக்கொன்ற ஐ.எஸ் தீவிரவாதிகள்



200 சிறுவர்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்யும் காட்சி இணையதளங்களில் வெளியாகி மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஐ.எஸ் தீவிரவாதிகள் அப்பாவி மக்களை கொலை செய்வதும் அதனை வீடியோ எடுத்து இணையதளங்களில் வெளியிடுவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இந்த கொடூர காட்சிகளைப் பார்த்து ரஷ்யா மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஏமனைச் சேர்ந்த ஆர்வலர் ஒருவர் வீடியோ ஒன்றை இணையதளத்தில் வெளியிட்டுள்ளார். சிரியாவைச் சேர்ந்த 200 சிறுவர்களை தரையில் வரிசையாக குப்புறப்படுக்க வைத்து ஐ.எஸ் தீவிரவாதிகள் துப்பாக்கியால் மிருகத்தனமாக சுட்டுக்கொலை செய்யும் காட்சி வீடியோவில் உள்ளது. அந்த வீடியோ 2014ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சிரியாவில் உள்ள தக்பா விமானப்படைத்தளம் அருகே எடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. தீவிரவாதிகள் கடந்த 2011ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை கொலை செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றிகரமாக விண்ணில் சீறிப்பாய்ந்த ஜிசாட்-15 செயற்கைகோள்



இஸ்ரோவின் நவீன தகவல் தொடர்பு செயற்கைகோளான ஜிசாட்-15, தென் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்ச் கயானாவிலிருந்து ஏரியன்-5 ரொக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. தகவல் தொடர்பு மற்றும் காலநிலை மாற்றத்தை அறிந்துகொள்வதற்காக, ஜிசாட்-15 எனும் செயற்கைகோளை சுமார் 860 கோடி செல[illegible] இஸ்ரோ வடிவமைத்தது. சுமார் 3,100 கிலோ எடைகொண்ட ஜிசாட்-15 செயற்கைகோளை, தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானாவிலுள்ள கொரு ஏவுதளத்திலிருந்து ஏரியன்-5 விஏ-227 எனும் ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்துவதற்கான ஏற்பாட்டை இஸ்ரோ செய்துவந்தது.

இதற்கான கவுண்டவுன் தொடங்கப்பட்ட நிலையில், (11-11-15) அன்று அதிகாலை 3.04 மணியளவில் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இதனுடன் சவுதி அரேபியாவின் அராப்சாட் 6பி செயற்கைகோளும் விண்ணில் செலுத்தப்பட்டது.

## கைதிகளால் முதலைகளுக்கு லஞ்சம் கொடுக்க முடியுமா?

மரண தண்டனை கைதிகளின் பாதுகாப்பிற்காக இந்தோனேசியா அரசு விரைவில் முதலைகளை பணியில் அமர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோனேஷியாவில் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் சிறையிலிருந்து தப்பிச் செல்வதை தடுப்பதற்காக, அவர்களின் பாதுகாப்பிற்காக முதலைகளை பணியில் அமர்த்த போதைப்பொருள் தடுப்புக்குழுவின் தலைவரான பூடி வாசேசோ அந்நாட்டு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது, இந்த திட்டமானது ஜேம்ஸ் பாண்ட் படத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த பணிக்காக தீவுப்பகுதிகளில் பல்வேறு வகையான முதலைகளை தேடிவருகிறோம். மேலும் மூர்க்கத்தனம் கொண்ட முதலைகள் தான் இந்த பணிக்கும் அதிகம் தேவைப்படுகின்றன. ஏனெனில் இவ்வகை முதலைகள் காவலர்கள் போன்று சிறப்பாக செயற்பட்டு, போதைப்பொருள் கைதிகள் சிறையில் இருந்து தப்பித்துகொள்ளா வண்ணம் பாதுகாக்கும். அதுமட்டுமன்றி கைதிகள் மனித காவலர்களுக்கு கொடுக்கும் லஞ்சத்தை இந்த முதலைகளுக்கு கொடுக்க முடியாதல்லவா? அதற்காகத்தான் இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ளேன் என்று கூறியுள்ளார். தற்போது இந்தத் திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளதால் விரைவில் இதுகுறித்து அந்நாட்டு அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோனேஷியாவில் போதைப்பொருள் கடத்துவது என்பது பெரிய குற்றமாகும், இதற்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், 2 அவுஸ்திரேலியர்கள் உட்பட 8 பேருக்கு மரணதண்டனை விதித்தது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களை அடித்து விரட்டிய அப்பிள் கடை நிறுவன ஊழியர்கள்



அவுஸ்திரேலியாவில் கருப்பின மாணவர்களுக்கு அப்பிள் நிறுவனத்தின் கடைக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மெல்போர்ன் நகரில் உள்ள அப்பிள் நிறுவனத்துக்குச் சொந்தமான கடைக்கு 15 வயதுள்ள கருப்பின மாணவர்கள் 6 பேர் சென்றுள்ளனர். அப்போது அவர்களை அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் தடுத்துள்ளனர். மேலும், பாதுகாப்பு அதிகாரிகள் உதவியுடன் அவர்களை வெளியேற்றியுள்ளனர். ஏன் எங்களுக்கு அனுமதி மறுக்கிறீர்கள் என்று அந்த மாணவர்கள் கேட்டதற்கு, 'நீங்கள் கருப்பாக இருப்பதால், இங்கே இருக்கும் பொருள்களை திருடி சென்று விடுவீர்கள்' என கடை ஊழியர் ஒருவர் பதிலளித்துள்ளார். நாங்கள் ஏன் திரு[illegible] போகிறோம் என இளைஞர் ஒருவர் கேள்வி கேட்டபோது, இங்கே விவாதத்துக்கு இடமில்லை. இங்கேயிருந்து உடனே வெளியே செல்லுங்கள் என்று கடை ஊழியர் கூறியிருக்கிறார். இதனை அக்கூட்டத்திலிருந்து இளைஞர் ஒருவர் ரகசியமாக வீடியோ பதிவு செய்துள்ளார்.

இந்த வீடியோ 50,000க்கும் அதிகமானோர்களால் யூ-டியூப்பில் பார்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அப்பிள் நிறுவனத்தின் இந்த இனப்பாகுபாடு குறித்து பல்வேறு இடங்களிலிருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இதற்கிடையில் தங்கள் கடைக்கு வரும் அனைத்து வாடிக்கையாளர்களையும் சமமாகவே நடத்துகிறோம் என்று கூறியுள்ள அப்பிள் நிறுவனம், இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

## தனது வாழ்வின் மறுபக்கத்தை விபரிக்கும் இளம்பெண்



சர்வதேச பெண் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு தனது வாழ்க்கையில் நடைபெற்ற சோகமான சம்பவங்களை பெண் ஒருவர் தைரியமாக உலகுக்கு தெரிவித்துள்ளார். உலக அளவில் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள சர்வதேச பெண் கடத்தல்காரர்கள், தங்களுக்குள் ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு, பெண்களை கடத்தி அவர்களை விபச்சார தொழில், வீட்டு வேலை போன்றவற்றில் ஈடுபடுத்துகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் அவர்களிடம் இருந்து தப்பிவந்தாலும், அதனை வெளியில் சொல்லாமல் தங்களுக்குள் மறைத்துவிடுகின்றனர். ஆனால், மெக்ஸிகோவைச் சேர்ந்த கர்லா என்ற பெண் தான் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு பாலியல் கொடுமைக்கு ஆளான கதையை தைரியமாக உலகுக்கு விபரித்துள்ளார். கர்லா கூறியதாவது, எனது 5 வயதில் தாயால் நிராகரிக்கப்பட்ட என்னை எனது உறவினர் ஒருவர் 5 வயதிலேயே பலாத்காரத்திற்கு உட்படுத்தினார். பின்னர், எனக்கு 12 வயது இருக்கும்போது, எனது நண்பர்களுக்காக மெக்சிகோவின் சுரங்க நிலையத்தில் காத்திருந்தபோது, அங்கு இனிப்புகளை விற்பனை செய்துகொண்டிருந்த சிறுவன் ஒருவன், சிலர் எனக்கு இனிப்புப்பொருட்களை கொடுக்க சொன்னதாகக் கூறி என்னிடம் [illegible] அதனை வாங்கிசாப்பிட்டு[illegible] பிறகு பார்த்தால் ஒரு வயதானவரின் காரில் இருந்தேன். பின்னர், அவரின் மூலம் ஒரு வாலிபனுக்கு அறி முகம் செய்யப்பட்டேன். அந்த வாலிபனோடு தொலைபேசி எண்ணை பரிமாறிக்கொண்ட எனக்கு நாளடைவில் பழக்கம் ஏற்பட்டது. அவன் ஆடை, உணவு என எனக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் வாங்கிகொடுத்தான், மேலும் என்னை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச்செல்வான். அவன் அழைத்துச்செல்லும் இடங்களில் எல்லாம் சிவப்பு நிற கொடி பறக்கும்.

பின்னர் தான், அவன் பெண் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவன் என்பது தெரியவந்தது. பின்னர் நாளடைவில் விபச்சாரத்திற்கு தள்ளப்பட்டேன், நான் மறுத்தபோது, என்னை இரும்புக்கம்பிகளால் தாக்கி சித்திரவதை செய்தான். சாலையோர விடுதிகள், வீடுகள் போன்ற இடங்களுக்கு விபச்சார தொழிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டேன், இந்த தொழிலில் எனக்கு விடுமுறையே கிடையாது. ஒரு நாளைக்கு 30 ஆண்கள் வருவார்கள். 30 ஆண்கள் வீதம் 4 ஆண்டுகள் 43,200 முறை பலாத்காரம் செய்யப்பட்டேன். ஒருமுறை ஹொட்டல் அறையில் விபச்சார தொழிலில் ஈடுபட்டிருந்தபோது பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டேன். பொலிசாரிடம் சிக்கியபோது எனக்கு விடுதலை கிடைத்துவிட்டதாகவே உணர்ந்தேன். தற்போது 23 வயதாகும் நான் சந்தித்த கொடுமைகளை வெளிப்படையாக தெரிவிக்கவே விரும்புகிறேன். கர்லா இதுகுறித்து வாடிகன் போப் ஆண்டவரிடம் முன்னரே தெரிவித்திருந்தார். மேலும் அமெரிக்க பாராளுமன்றத்திலும் மனித கடத்தல் மற்றும் விபச்சாரத்திற்குள் தள்ளுவது என்பது உலகில் மிகப்பெரிய பிரச்சினையாக வளர்ந்து வருவதாக தனது செய்தியில் சுட்டிக்காட்டி உள்ளார். மனித கடத்தல் ஒரு லாபகரமான தொழில் என்பதால் மெக்சிகோ, அட்லாண்டா, நியூயோர்க் போன்ற நாடுகளில் இந்த தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார்,புதுவருடத்தை முன்னிட்டு தினப்புயல் பத்திரிகையின் சிறப்பு விளம்பரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## ஹை ஹீல்ஸ் காலுடன் அந்தரத்தில் நடந்த பெண்...

ஹை ஹீல்ஸ் போடும் பெண்களால் சரியாக நடக்க முடியாது என்பது போலவே அமைக்கப்பட்டிருக்கும் தமிழ் சினிமா காட்சிகளும், கேலி கிண்டல் ஜோக்குகளும் ;பெயித்திடம் எடுபடாது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த திகில் சாகச விரும்பிதான் பெயித் டிக்கி(26). நிறைய சாகசங்களை செய்து போரடித்ததால் அண்மையில் Highgirls Brazil Festival இல் கலந்துகொண்டார். 2755 அடி உயரத்தில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள ஹைலைனில் (கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும் வழி) ஹை ஹீல்ஸ் அணிந்த காலுடன் நடந்தார்.

கழுத்து வலியையும் பொருட்படுத்தாமல் பிரேசில் மக்கள் பெயித்தை வெகு நேரமாக அண்ணார்ந்தே பார்த்துக்கொண்டிருந்தார்கள். வெறும் காலுடனே நடக்க தடுமாறும் இந்த இடத்தை ஹை ஹீல்ஸ் காலுடன் கடப்பதென்றால் சும்மாவா...



## சடலங்களை தோண்டியெடுத்து, சுத்தப்படுத்தி, புத்தாடை அணிவித்துக் கொண்டாடும் திருவிழா

இந்தோனேஷியாவில் உள்ள சுலவேசி நகரில் 3 வருடத்திற்கு ஒருமுறை Manene என்ற திருவிழா கொண்டாடுவது வழக்கம். இந்த வினோத திருவிழாவில் டோஜ்ரன் இன மக்கள் இறந்த உறவினர்களின் புதைத்த சடலங்களைத் தோண்டியெடுத்து , சுத்தப்படுத்தி, அதற்கு புத்தாடை அணிவிப்பர். இவ்வாறு செய்வதன் மூலம் தங்களுக்கு அதிர்ஷ்டம் வந்து சேரும் என்பது அவர்களின் நம்பிக்கை ஆகும்.



## ஈபிள் கோபுரத்தில் ஏறி சாகசம் செய்த ஜேம்ஸ் கிங்ஸ்டன்

பிரித்தானியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், எவ்வித பாதுகாப்புமின்றி பிரான்சின் ஈபிள் கோபுரத்தின் மீது ஏறி சாகசம் புரிந்துள்ளார். பிரித்தானியாவைச் சேர்ந்த இளைஞர் ஜேம்ஸ் கிங்ஸ்டன் (வயது 24), யூடியூப்பில் வீடியோவை பதிவேற்றம் செய்துள்ளார். அதில், எவ்வித பாதுகாப்புமின்றி சட்டவிரோதமாக பிரான்சின் ஈபிள் கோபுரத்தில் ஏறி சாகசம் புரிந்துள்ளார். இரவு 01 மணியளவில் பாதுகாப்பு அதிகாரிகளின் கண்களில் படாதவாறு கயிறுகள் ஏதுமின்றி கம்பிகளை பிடித்துக்கொண்டே ஏறியுள்ளார்.



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பீட திறப்பு விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் கடந்த 12.11.2015 அன்று நடைபெற்றபோது






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 15.11.2015 அன்று வெளியிடப்பட்டது.